மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்ப—ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல் திருக்குறள் !

வீடு வாழ்ந்தால் தான் நாடு வாழும் என்று சொன்ன வித்தகர் திருவள்ளுவரே!

வள்ளுவரை போற்றிப் புகழ்ந்தால் மட்டும் போதாது அவர் தந்த நெறியில் வாழவும் வேண்டும்!

வள்ளுவர் பட வெளியீட்டு விழாவில் அறிஞர் அண்ணா பேருரை !

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலுள்ள திறந்த வெளியில் அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற வள்ளுவர் திருவுருவப் பட வெளியீட்டு விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது.

அறிவும், அன்பும், பெருமையும் வாய்ந்த அருமைத் தலைவர் அவர்களே பெரியோர்களே! நண்பர்களே! தாய்மார்களே, படம் அமைத்து நல்லுபதேசம் செய்து நாட்டில் நற்பணி செய்துவிட்டு, இன்று நடமாடும் படங்களை நாடி வந்து நல்லுரை கூறிய அடிகளார் அவர்களே!

இன்று நமக்கெல்லாம் ஒரு பெரும் திருநாள் ! மட்டற்ற மகிழ்ச்சி பொங்கும் நன்னாள் !

நமது வாழ்க்கைக்கு வழிகோலி—வாழ்க்கையை அறவழியில் நடத்த நல்லுரை பகர்ந்த பெருந்தகையைப் பாராட்டும் நல்ல நாள்!

எண்ணும் எண்ணங்களை, ஈடேற்றுவதற்கு உறுதுணையாகவும், உண்மை உலகைக் காண்பதற்கும் உலக மக்களெல்லாம் போற்றிப் பாராட்டி அவர் வழியை பின் பற்றும் வகையினைக் கண்ட வழி காட்டியையும், அவர் தந்த நல்லுரைகளையும் போற்றிப் புகழும் பெரும் விழா.

இந்த விழாவில் நான் கலந்து கொள்வதற்கு அகமகிழ்கிறேன். இந்த வாய்ப்பினை நல்கிய நண்பர்களைப் பாராட்டுகிறேன்,

இந்த விழாவில் துறவிக்கோலம் பூண்டு, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும், மொழிக்கும் நற்பணிபுரியும் அடிகளாரும், பல அரசியல் கருத்துவேற்றுமை கொண்டவர்களும் கலந்திருக்கிறோம்.

தமிழர்கள் என்று எவர் கூறிக் கொண்டாலும், தமிழ் நாட்டில் பிறந்தவர்கள் எந்த நோக்கம் கொண்டவர்களானாலும் நாட்டு உயர்வுக்காகவும், மொழி பாதுகாப்புக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் பாடுபட, அதற்கு நல்வழி காண வள்ளுவர் குறள் ஒன்று சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கு எடுத்துக் காட்டு இந்தப் பெரும் விழாவேயாகும்!

உங்களுக்கெல்லாம் ஒரு செய்தியைக் கூற ஆசைப்படுகிறேன்.

ஒருநாள் நள்ளிரவு, காரைக்குடிக்கு அருகிலிருந்து தொலைபேசி மூலமாக அடிகளார் அவர்கள் சென்னையிலிருக்கும் என்னுடன் பேசினார். அவர் அன்று தமது எண்ணத்தை—ஆசையை—கருத்தை என்னிடம் தெரிவித்தார். அவர் எண்ணும் எண்ணம் நிறைவேறும் நாளை எதிர்ப்பார்ப்பதாகவும் அறிவித்தார். இன்று அது நிறைவேறியிருக்கிறது. அதற்காக அடிகளார் அகமகிழ்வாரென்று நினைக்கிறேன்.

அன்று அடிகளார் அவர்கள் தெரிவித்தார்:

‘‘அரசியல் கருத்துக்களால் தமிழர்கள் பிரிந்திருந்தாலும் எந்த நோக்கோடு பணியாற்றினாலும் கருத்துக்கள் மலை போல் தடுத்து வந்தாலும் தமிழர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் ஆண்டுக்கொரு முறை ஒன்று கூடி தமிழர்களின நல்வாழ்வுக்கான முறைகளைக் காண வழி வகைகளைச்செய்ய ஒரே மேடையில ஒன்று சேரவேண்டும்.

(3-ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 6-3-60 | ஒலி 18

ஒரே வழி!

"தென்னாடு செழிக்கவில்லை, தென்னாட்டில் தொழில் வளம் பெருகவில்லை" என்ற கருத்து இன்றைய தினம் எல்லோருடைய உள்ளத்திலும் அரும்பி மலர ஆரம்பித்து விட்டது!

"வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது" என்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக் காட்டிலும் மற்றவர்களிடம் அதிகமாக ஏற்பட்டு விட்டது என்று கூடச் சொல்லாம்! குறிப்பாக ஆளும் கட்சியினரிடத்திலும் கூட இந்த எண்ணம் தோன்ற ஆரம்பித்து விட்டது! மந்திரிகளைத் தவிர—மற்றவர்கள் எல்லோரும்—ஏன் மந்திரிகள் கூட சில பல நேரங்களில் இதை உணர்ந்து பேசவும் செய்கின்றனர்! ஆனால் யார் பேசியும் என்ன பயன் ஏற்பட்டது, இனி தான் என்ன பயன் ஏற்படப் போகிறது?

இந்தியத் துணைக் கண்டம் விடுதலைப் பெற்று ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகள் ஆகின்றன! இந்த பதின்மூன்று ஆண்டு காலததில் தென்னகம், குறிப்பாக தமிழகம் தான் என்ன பலனைக் கண்டிருக்கிறது!

வடக்கே தினம், தினம் ஆலைகள், பெரும் தொழில் நிலையங்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன! தென்னகத்தில் ஏதாவது ஒரு பெரும் தொழில் நிலையம் ஏற்பட்டதுண்டா? ஒரு கனரகத் தொழிற்சாலை—அது கூட வேண்டாம் ஒரு சாதாரண தொழில் நிலையமாவது ஏற்பட்டிருக்கின்றதா? இல்லை, இல்லை இல்லை! ஏன்? காரணம் என்ன? நாட்டு பற்றுடையவர்கள், நல்லெண்ணம் படைத்தவர்கள், மக்கள் நலம் பேணுபவர்கள், நாட்டை ஆளவில்லை—எனவே தான் நாடு செழிக்கவில்லை, நாட்டு மக்கள் வாழ வழியும் பிறக்கவில்லை!

"தென்னகததில் பெரும் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும், பெரும பெரும் ஆலைகளை உண்டாக்க வேண்டும்" என்று நாம் அடிக்கடி சொன்னால் மந்திரிகள் நம்மை கிண்டல் செய்கிறார்கள், நக்கல் புரிகிறார்கள்!

"அண்ணாதுரை அணைகட்ட சொல்லுகிறாரே—எங்கே கட்டுவது? அவருடைய வாய்க்குத் தான் அணை கட்ட வேண்டும்" என்கிறார் ஒரு மந்திரி!

"இரும்புத் தொழிற்சாலை வேண்டுமாமே இரும்புத் தொழிற்சாலை—ஏது இரும்பு?" என்கிறார் மற்றொரு மந்திரி!

"சேலத்திலே இரும்பு இருக்கிறதாமே இரும்பு—அந்த இரும்பால் எதைச் செய்ய முடியும், எதற்கு தான் பயன்படும்" என்கிறார் இன்னொரு மந்திரி!

"இரும்பு கிடைத்தால் போதுமா. நிலக்கரி வேண்டாமா?" என்கிறார் இன்னொரு மந்திரி!

"ஐயோ பாவம்! ஒன்றும் புரியாதவர்கள், தெரியாதவர்கள்—பேச மட்டும தெரிந்து கொண்டு, பேசிக் கொண்டே இருக்கிறார்கள்" என்கிறார் ஒரு மந்திரி!

இப்படி எட்டு மந்திரிகளும் எட்டு விதமான விளக்கங்களை தந்தபடியே காலத்தையும் கழித்துக் கொண்டு வருகின்றனர்!

மந்திரிகளுடைய பேச்சில் உண்மை ஏதாவது இருக்கின்றதா என்பதை கொஞ்சம் ஆராய்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

"சேலத்து இரும்பைப் பயன்படுத்துங்கள், பயன்படுத்துங்கள்" என்று நாம் பேசாத நாட்களே இல்லை! பல இடங்களில், பல நூறு கூட்டங்களில் எடுத்து, எடுத்துச் சொன்ன பிறகு கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்த்தார்கள்! "ஆமாம், ஆமாம்! உண்மை தான்" என்று மனதிற்குள்ளேயே எண்ணி மகிழ்ந்தார்கள்!

"இரும்புக் கனி இருக்கிறது—வாஸ்துவம் தான், ஆனால் அதற்கு எரி பொருளான நிலக்கரி இல்லையே" என்று பேசத் தொடங்கினர்!

நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை பக்குவப்படுத்தினால் அது சேலத்து இரும்புக்கு பெரிதும் பயன்படும் என்பதை நிபுணர்கள் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லி விட்டனர்!

கிழக்கு ஜெர்மனியில் இது போன்ற பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தான் பெருவாரியான இரும்பை உற்பத்தி செய்து வருகின்றனர்! கிழக்கு ஜெர்மனியில் சாத்தியமாக இருப்பது, இங்கு மட்டும் ஏன் சாத்தியமாக இருக்காது?

கிழக்கு ஜெர்மனியின் நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து நல்ல பலனைக் காண முடியும்!

சமீபத்தில் சென்னை வந்திருந்த கிழக்கு ஜெர்மனி உதவிப் பிரதமரோடு, சென்னை அமைச்சர்கள் கலந்தாலோசித்ததாகவும் கூறப்படுகிறது! கிழக்கு ஜெர்மனி உதவிப் பிரதமர் நிபுணர்களையும், இயந்திரக்கருவிகளையும் தந்து உதவுவதாக வாக்களித்ததாகவும் சொல்லப்படுகிறது! ஆனால் இந்த பெரும் காரியத்தை சென்னை அமைச்சர்களால் மட்டும் சாதிக்க முடியுமா என்பது தான் தற்போதைய கேள்வியாகும்!

"மத்திய சர்க்காரின் உதவி இதற்குப் பூர்ணமாக கிடைக்குமா? அப்படி கிடைத்து, இரும்பு உற்பத்தியில் வெற்றி கண்டாலும் இங்கு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுமா" என்ற வினாக்களுக்கெல்லாம் சுலபமாகவும், தெளிவாகவும் விடையளிக்க முடியாத நிலையில் தான் நாம் இருந்து வருகிறோம்!

சேலத்து இரும்பைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தித் தந்தால்—தரமாட்டார்கள்—அப்படியே தந்தாலும் அதைக் கொண்டு மட்டும் நாம் திருப்தியடைய முடியுமா? அதைக் கொண்டு மட்டுமே தென்னகம் வளம் பெற்று விடுமா? ஒருக்காலும் பெறாது, பெறவும் முடியாது! பிறகு நாடும், நாமும் வாழ்வது தான் எப்படி?

நமது ஆயுட் காலம் பூராவுமே இதே சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தால் நாம் சுகம் பெறுவதுதான் எப்போது? ஒரு சுதந்திர நாட்டில்—அதுவும் சுதந்திரம் கிடைத்து பதின்மூன்று ஆண்டு காலம் கழித்த பின்பும் இந்த நிலை என்றால் இந்த நாடு இருக்கத் தான் வேண்டுமா? அதில் நாம் வாழத் தான் வேண்டுமா?

உண்டு, உறங்கி, பெண்டு பிள்ளைகளோடு வாழ்வது மட்டுமே மனிதர்களுடைய இலட்சியமல்ல! நாட்டுக்காகவும் வாழ வேணடும்!

நமது நாடு வாழ வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழி, நமது நாடு விடுதலை பெற வேண்டும்!

நமது நாடு விடுதலை பெற வேண்டுமானால் அதற்கும் ஒரே வழி, முதலில் காங்கிரஸ் சர்க்காரை வீட்டுக்கனுப்ப வேண்டும்!

காங்கிரஸ் சர்க்காரை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றால் அதற்கும் ஒரே வழி, நாம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்!

நாம், தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்றால் அதற்கும் ஒரே ஒரு வழி தான் உண்டு! அந்த வழி தான் அறிஞர் அண்ணா கூறிய வழி! நாம் அனைவரும் உண்டி வைத்து நிதி சேர்த்துத் தருவது தான் அந்த வழியுமாகும்!

அந்த வழியை வருகிற தேர்தலிலாவது காட்டுங்கள்! அதனால் நாடு வாழ வழி செய்யுங்கள்!

குடுகுடுப்பைக்காரன் சட்டை போன்றிருக்கிறது நமக்கு நூல்கள்

(அண்ணா பேச்சு)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக நீங்கள் உறுதுணையாக—உதவியாக இருந்து பாடுபடவேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.

நான் அன்று அவரிடம் கூறினேன், அந்தப் பொன்னாள். அந்த நன்னாள் விரைவில் வரும் என்று கூறினேன்.

அத்தகைய வாய்ப்பினை எவர் உதவியுமின்றி—உறுதுணையுமின்றி வாய்த்திருக்கிறது. அதற்கு வள்ளுவர் வழிகாட்டியிருக்கிறார்.

ஆகவே அடிகளார் அவர்களுக்குக் கூறுவேன்.

அடிகளார் அவர்களே! தமிழ் மேல் பற்றும், தமிழர்கள் மேல் அன்பும். நாட்டின் மீது பாசமும் கொண்ட தமிழர்கள் எங்கிருந்தாலும், எந்த நோக்கத்தோடு பணியாற்றினாலும், சமயம் நேரும் போது ஒன்றுபடுவர். வள்ளுவர் குறளைப் படித்தவர்கள், அவர்கள் வழி வந்தவர்கள் அதைச் செய்தே காட்டுவார்கள். இதை இன்று கண்டு விட்டோம்.

நமது நண்பர் வேணுகோபால் அவர்கள் நமக்குத் தீட்டித் தந்த வள்ளுவரின் திருவுருவப் படம் தங்களுடைய விருப்பத்தை—எண்ணத்தை ஆசையை நிறைவேற்றித் தந்திருக்கிறது.

பல கோணங்களில் இருந்தவர்களை, பல வடிவில் இருப்பவர்களை ஒன்றுபடுத்தி, ஒற்றுமையடையச் செய்து இங்கே காணச் செய்திருக்கிறது. இதிலிருந்தே வள்ளுவரின் பெருமை நன்கு விளக்குகிறது.

நான் இன்று துரைத்தனத்தாருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். ஆண்டுக்கொரு முறை இந்த மாதிரி விழாக்களமைத்து தமிழர்களை ஒன்று படுத்தி, பல கருத்துக்களைக் கொண்டவர்களை அழைத்து திருவள்ளுவரின் நினைவால் ஒரு விழா நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்று பொது விடுமுறையாக்கி தமிழ் மக்கள் அன்று வள்ளுவரைப் பற்றியும், அவரது நூலைப் பற்றியும் அறியும் படியான வாய்ப்பினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இங்கு பேசியவர்கள் திருவள்ளுவரின் ஓவியத்தைப் பற்றியும், அதிலுள்ள அங்கங்களைப் பற்றியும், கண், காது முதலியவைகள் அமைந்திருக்கும் கருத்துகளைப் பற்றியும் விளக்கினார்கள். அதோடு நின்று விடக்கூடாது. வள்ளுவர் அரசுக்கு—நமக்கு—நாட்டுக்கு உலகுக்கு தந்துள்ள அறிவுரைகளை எடுத்துக் கூறவேண்டும்; வள்ளுவரின் உருவம் அஞ்சற் தலையில் அமைந்திருப்பதைப் பாராட்டிப் பேசினார்கள்.

இந்த ஓவியத்தில் வள்ளுவரின் கருத்துக்கள் அவர் மனதில் கொண்டவைகள் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. ஓவியரின் எண்ணம் ஈடேறியிருக்கிறது அவர் தமது முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார்.

இந்த விழாவிற்கு தலைமை தாங்கியுள்ள டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் நமக்கு அழகாக எடுத்துரைத்திருக்கிறார்.

நமது வள்ளுவப் பெருந்தகையின் உருவம் அஞ்சல் தலைகளில் இடம் பெற வேண்டுமென்ற கிளர்ச்சிகள், வேண்டுகோள்கள் ஆசைகள் நிறைவேறியிருக்கிறதென்று நாம் பல மாநாடுகள் கூட்டி நமது ஆசையைத் தெரிவித்தோம். பல தீர்மானங்கள் மூலம் எண்ணத்தை வலியுறுத்தினோம். பல மன்றங்கள் தீர்மானங்களை நிறைவேற்றி அரசினருக்கு அனுப்பி வைத்தோம். இன்று வெற்றிகள் கண்டிருக்கிறோம். நமது கிளர்ச்சியின் பயனைப் பெற்றிருக்கிறோம்,

இந்த வாய்ப்பு பெறுவதற்கு மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களே பொறுப்பாளியாவார். அவரைப் பாராட்டுகிறோம்.

டாக்டர் சுப்பராயனைப் பற்றி நாம் அறிவோம். அவருக்குள்ள தமிழ் ஆர்வம், நாட்டுப்பற்று ஆகியவைகளை நாமறிவோம்.

அவர் அமைச்சராக வந்தவுடன் தமிழ் மக்களின் எண்ணத்தை ஈடேற்றித் தந்துள்ளார்.

வள்ளுவரை ஒதுக்கித் தள்ளியபடி, அவரைப் புறக்கணித்தப்படி ஒத்துக்கப் பட்டார்கள். ஆனால் வள்ளுவருக்குப் பெருமை கிடைத்தபடி இன்று அவருக்கு பெருமை வந்திருக்கிறது. அவரது கடமையைச் செய்து விட்டார்,

நமது நண்பர் வேணுகோபால் அவர்கள் நமக்குத் தெரியாதிருந்த வள்ளுவரின் உருவம் எப்படி இருக்கும் என்று புரியாதிருந்த நமக்கு ஒரு உருவம் தீட்டி தந்திருக்கிறார்.

வள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பார் என்று மனக்கண் முன் நிறுத்தி உருவம் அமைத்திருக்கிறார். பல நாளாக அவர் முயற்சித்து வள்ளுவரின் பாடலிலுள்ள கருத்துக்களைக் கொண்டே ஒரு உருவம் தீட்டினார், வெற்றிக் கண்டார்.

அஞ்சல் தலையில் வள்ளுவர் உருவம் அமைய வேண்டுமென்ற நமது ஆசையும், கிளர்ச்சியும் நிறைவேறும்நாள் வந்தது!

இந்த இரண்டும் ஒன்று சேர்ந்து இருந்து இந்த விழாவினைக் கொண்டாடும் நிலைக்கு வந்திருக்கிறோம். நமது வள்ளுவரைப் பற்றி உலகம் உணரும் ஒரு வாய்ப்பும் கிட்டி விட்டது.

அடிகளார் பேசும் போது குறிப்பிட்டார், "உருவம்வைத்து வணங்குவோரும் உருவ வணக்கம் வேண்டாம் என்று கூறும் அண்ணாதுரையும் ஒன்று கூடியிருக்கிறோம். அதற்காக நான் மகிழ்கிறேன், பாராட்டுகிறேன் என்று.

நான் அடிகளார்க்குக் கூற ஆசைப்படுகிறேன்"

உருவத்தால் மக்களுக்கு—நாட்டுக்கு நன்மை பயப்பதாக இருந்தால், அந்த உருவத்தால் மக்கள் நன்மை அடைவார்களென்றால் அதை ஏற்று அஞ்சலி செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

உருவத்தால் நாட்டு மக்களுக்குக் கேடுகள் தருகிறது, நாட்டு மக்களுக்கு நன்மை இல்லை என்றால் ஒதுக்கித் தள்ளித் தயாராக இருக்கிறேன்.

இன்னும் நல்ல முறையிலேயே அடிகளாருக்குக் கூற ஆசைப் படுகிறேன் வடிவம் வேண்டும் வேண்டாம் மென்பதல்ல என் கருத்துவடிவத்தால் மக்கள் வாட்டம் போக்க வழி இருந்தால், வகையிருந்தால் ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கிறேன்,

துறவி வேடத்தைக் கண்டு துவழ்பவனல்ல நான். துறவி வேடம் கொண்டு இல்லறத்திலிருப்பவர்களுக்கு நல்லது செய்பவர்களை நான் பாராட்டுவேன் பின்பற்றுவேன் இன்று துறவி வேடம் கொண்டு. மொழிக்கும் நாட்டுக்கும் பல எதிர்ப்புகளோடு பணியாற்றும் அடிகளார் தொண்டை மக்களின் உற்ற நண்பராகப் பணியாற்றும் பண்பினைப் பாராட்டுகிறேன். அவருக்குப் பல ஆபத்துக்கள் இருப்பதையும் நானறிவேன்.

"அடிகளார் அவர்களே, தாங்கள் அத்துறையில் மக்கள் மேம்பாட்டடைய பாடுபட்டு வருவதை மக்களுக்கு நல்லதொண்டு செய்வதைப் பாராட்டுகிறேன்' போற்றுகிறேன் கோலத்தைப் பார்த்து மதிப்பவனல்ல, ஞாலத்தை உயர்த்த பாடுபடுவதைக் கண்டு மகிழ்பவன் நான்.

மக்களுக்குள்ள அடிமையை அகற்ற—வாழ்வை உயாத்தஎப்படி அவர்களுடனும் ஒத்துழைக்க நான் பாடுபட முன் வருவேன்,

இதைப்பற்றி தங்களுக்கு பயம் வேண்டாம்! சந்தேகம் வேண்டாம்.

வள்ளுவரின் குறளைப் படித்தவர்கள் அவரை அவர் நூலால் அறிந்தவர்கள் அவரது உரைகளைக் கவர்ந்தவர்கள் அவர் எப்படி இருப்பார்; அவர் உருவம் எத்தன்மையதாய் இருக்குமென்று காண வேட்கைகொண்டவர்களுக்கு, ஆர்வம் கொண்டவர்களுக்கு நமது நண்பர்வேணுகோபால் அவர்கள், "இவர் தான் வள்ளுவர், இவர் தான் நமது வழிகாட்டி என்று நாம் மகிழும் வண்ணம் நமக்கு ஒரு உருவம் தீட்டித் தந்துள்ளார்.

அந்த உருவம் நம்மையெல்லாம் கவர்கிறது. நமது மனதையெலலாம் ஈர்த்து விட்டது,

நமக்கெல்லாம் ஒரு பற்றையும் பாசத்தையும், பிரியத்தையும்தந்திருக்கிறது. எது, எது எப்படி இருக்க வேண்டுமோ, வள்ளுவர் உலகுக்கு கூறிய வாய்மைப்படி அழுதற நமக்கு உருவம் தீட்டிக் கொடுத்து விட்டார்! இனி அந்த உருவத்தை வைத்து அகமகிழ்வதாலோ, பெருமைப் படுவதாலோ பயனில்லை!

வள்ளுவரை ஆண்டவனுக்கு இணை சேர்ப்பதிலோ பயனில்லை

இன்று ஆண்டவனுக்கு மதிப்புக் குறைந்தற்குக் காரணம், ஆண்டவனின் உருவத்திற்கு தங்கள், தங்கள் பிரியம் போல் உவமை தந்ததால் தான், பெருமைப் படுத்தியதால் தான் ஏற்பட்டது! அந்த மாதிரி, வள்ளுவர் உருவத்திற்கு உவமை தரக் கூடாது!

இங்கு பேசிய எனது தம்பி கருணாநிதிவள்ளுவர் கண்களுக்கும் என் கண்களுக்கும் ஒத்திட்டு உவமை தந்தார். அது கூடாது.

அவர் என் மீதுள்ள அன்பால், பிரியத்தால் அவ்வாறு கூறினர்

மக்கள் ஒப்புக் கொள்ளும் படி, ஏற்றுக் கொள்ளும்படி தக்கபடி வந்தனை வழிபாடு செய்ய வேண்டும்,

வள்ளுவர் மக்களுக்குக் காட்டிய வழிகளை உணர்ந்து அதன் படி உருவத்திற்கு உவமை தர வேண்டும் அதை விடுத்து இன்று திரு. வேணு கோபால் தந்துள்ள இந்த வடிவததைப் பார்த்த ஒருவர், இந்த உருவம் நன்றாக இருக்கிறது. மக்களெல்லாம் நன்றாக மரியாதை செலுத்த வேண்டும் என்று கூற இந்த உருவத்தை மக்கள் மாடத்தில் வைத்து போற்றி மரியாதை செலுத்த வேண்டும், சூடம் பழம் வைத்து வணங்க வேண்டும் என்று ஒருவர் கூறினால் நான் என்ன நினைப்பேன். அப்படி கூறியவர் ஒரு சூட வியாயபாரி என்று தான் கருதுவேன்!

அதே போன்று இன்னொருவர் வந்து வள்ளுவர் திருவுருவத்தைச் சட்டமாக்கி அதற்குப் பக்கத்திலே இன்னின்ன படங்களை வீடுகளிளெல்லாம் மாட்டி அச்சனை செய்து வணங்கி மரியாதை செய்ய வேண்டுமென்று தெரிவித்தால் அவர் படக் கடைக்காரர் என்று தான் நினைப்பேன்.

வள்ளுவர் நினைத்து நமக்குச் சொன்ன கருத்துக்கள், எண்ணிய முயற்சிகள் நிலைத்து நிற்க இந்த உருவம் பயன் பட வேண்டும்.

நாட்டின் நலிவைப் போக்க எல்லோரும் இன்புற்றிருக்க பயன்பட வேண்டும், அதை விட்டு விட்டு உருவத்தின் அழகை உவமைப் படுத்திக்கூறி கொண்டிருக்கக் கூடாது.

கிருஷ்ணன் படத்தைக் கூட ஒவ்வொருவர் அவரது மனநிலைப் படி உவமைப் படுத்தி அதை வெளியிடுகிறார்கள்.

மற்றும் புராணங்களில் கவரும் ஒவ்வொரு படங்களின் தன்மையும் அப்படித்தான் அவரவர்கள் பிரியம் போல் காட்டுகிறார்கள்,

ஓவியம் எப்படி இருக்க வேண்டுமானல் அதன் சிறப்பை விளக்கிக் காட்ட வேண்டும். செயல்களை விளக்கி காட்ட வேண்டும்!

(7-ம் பக்கம் பார்க்க)

சட்டத்தை-அதிகாரத்தை வைத்து சிப்பந்திகளை இனி அடக்கமுடியாது !

ஆட்சியாளர்களிடத்தில் அதிருப்தி வளர்கிறது !

இது நிலைபெறுமானுல் ஆபத்து தான் ஏற்படும் !

ஆட்சியாளருக்கு நெடுஞ்செழியன் எச்சரிக்கை !

தென் பிராந்தியம் ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஊழியர் சங்கத்தின் கூட்டம் 22-2-60ம் தேதி மாலை சென்னை கோகலே மண்டபத்தில் திரு. கே. ராமசாமி தலைமையில் நடைபெற்றது!



தலைவர், ஊழியர்களுக்குள்ள குறைபாடுகளைப் பற்றியும், அவர்கள் அரசினருக்குத் தந்துள்ள கோரிக்கைகளைப் பற்றியும் விளக்கமாகவும் விரிவாகவும் பேசினர்!

பின்னர் திருவாளர்கள் லட்சுமி நரசிம்மன், சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர் ஜி ராஜமன்னர், பர்மா ஷெல் ஊழியர் சங்கத் தலைவர் தியாகராஜன், சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் எஸ் எஸ். மாரிசாமி, சி. ஆர். சீனுவாசன் ஆகியோர்கள் மேற்படி ஊழியர்களின் குறைகளையும் சர்க்காரின் போக்குகளையும் விளக்கி பல ஆதாரங்களுடனும் பேசினர்கள். பின்னர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் இ. ரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது—

அன்புகெழுமிய அவைத் தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே, இன்று இங்கு கூடியிருக்கும் ஆயுள் இன்சூரன்ஸ் ஊழியர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கியதற்காக உங்கட்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி கூட்டத் தலைவரும், அருமை நண்பர்களும் தெளிவாக விளக்கிப் பேசினர்கள்.

அவர்கள் உங்களது குறைபாடுகளை மிக நீதியோடும், நேர்மையோடும், நுட்பத்தோடும், தெளிவோடும் ஆதாரத்தோடும், அரசினருக்கு விளங்கும் தன்மையொடும் அதை நீக்குவதற்கான வழி வகைகளையும் எடுத்துரைத்தார்கள்.

நானும் அவர்கள் பேசியதைப் பின் பற்றி உங்களுக்குப் பொது மக்களின் ஆதரவு தர வேண்டிய தன் அவசியம் பற்றியும் பேசவே வந்திருக்கிறேன்.

எங்களையெல்லாம் நீங்கள் அழைத்திருப்பது உங்களது லட்சியங்கள். உங்களுகிருக்கும் குறைபாடுகள் பொது மக்கள் அறிய வேண்டுமென்ற நோக்கத்தோடு எங்களை அழைத்திருக்கிறீர்கள்.

உங்களது குறைகளை, கோரிக்கைகளை, தேவைகளை அரசினருக்கு நயமாகச் சொல்வதற்கு கொஞ்சம் முடுக்குடன் வற்புறுத்த—அதட்டலுடன் கேட்க முறைத்துக் கூற, நெறித்துரைக்கவே நண்பர்களான மாரிசாமியையும், ராஜமன்னரையும், தியாகராஜனையும் என்னையும் அழைத்திருக்கிறீர்கள்!

நாங்கள் பொதுமக்களை அடிக்கடி சந்திப்பவர்கள்— அவர்களிடம் தொடர்பு கொள்பவர்கள், அவர்களிடம் உங்கள் நிலையை எடுத்துரைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடேயே எங்களை அழைத்திருக்கிறீர்கள்!

நீங்கள் வயிராற உண்பதற்கு உணவும், நல்ல முறையில் உடுக்க உடையும், வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் பெறவும் அடிப்படைச் செலவுக்கான நிலமையை யடையவும், நீங்கள் பல கோரிக்கைகளைச் சமர்பிதித்திருக்கிறீர்கள்!

அந்தக் குறைபாடுகளையும், கோரிக்கைகளையும், நியாயமான நேர்மையான உரிமைகளை பெறவும், ஆட்சியாளர்களுக்கு உணர்த்தவுமே நாம் கூடியிருக்கிறோம்! பேசுகிறோம், எடுத்தியம்புகிறோம்!

இந்தக் கோரிக்கைகளை வைத்து ஆட்சியாளரை மிரட்டவோ, அச்சுறுத்தவோ, உணர்ச்சியைத் தூண்டவோ, வேலை நிறுத்தம் செய்து அதன் விளைவைக் கொண்டு வேடிக்கை காட்டவோ நாங்கள் விரும்பவில்லை! ஆசைப்படவில்லை, எண்ணவுமில்லை!

உங்களுக்கிருக்கும் அவல நிலையைப் போக்க—அல்லலை நீக்க வழிவகுக்கவே, சர்க்காருக்கு உணர்த்தவே இங்கு நாம் கூடியிருக்கிறோம்.

சட்டத்தை வைத்தோ அதிகாரத்தை வைத்தோ, ஆட்சியைக் காட்டியோ எப்பொழுதும் சிப்பந்திகளை மிரட்டிக் கொண்டிருக்க முடியாது! பயம் என்பது, அடங்கி இருப்பது என்பது ஒரு நிலைக்குத்தான். எப்பொழுதுமே செய்து கொண்டிருக்க முடியாது. எல்லை மீறி விட்டால், தொல்லை சகிக்க முடியா விட்டால், தாங்க முடியாத நிலை வந்து விட்டால் எதிர்க்கத் தான் வேண்டுமென்ற சூழ்நிலை பிறந்து விட்டால் வலுவற்றவனும், கோழையும் வீரனுகி விடுவான்.

பூனையும் அடக்க முடியாத தொல்லை ஏற்பட்டு விட்டால் புலியாக மாறும் நிலைக்கு வருவதைப் பார்க்கிறோம் "பூனையும் புலியாகமாறும்" என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோம்,

ஒரு பூனை எதிரில் வருகிறது! அதை சிறு குச்சு கொண்டு அடிக்கவும், துன்புறுத்தவும் ஒருவன் முயற்சிக்கிறுன். அதைக் கண்டு பூனை ஓடப் பார்க்கிறது! தப்பிப்பதற்கு வழி பார்க்கிறது ஜன்னல் பக்கம் ஏறி ஓடலாமா? கூறை மீது தப்பிக்கலாமா? சுவர் மீது குதித்து உயிருக்குப் பாதுகாப்புத் தேடலாமா என்று முயற்சிககிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

வளர்ந்து வரும் எதிர்காலத்தை அழிக்கின்ற கட்சி, காங்கிரஸ்!

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியிலே அமர வேண்டும்!

அடுத்த தேர்தலில் காங்கிரஸை தோற்கடித்து பாடம் புகட்டுங்கள்!

நாஞ்சில் கி. மனோகரன் முழக்கம்!

மூர்மார்க்கெட் பொங்கல் விழா குழுவினரால், கடந்த 26-2-60 அன்று தோழர் மா. குப்புசாமி தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப் பட்டது. அதுபோழ்து தோழர்கள் கோ. இரங்கையன், கோ. சண்முகம் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் குறித்தும். கழக வளர்ச்சிக்காக தோழர்கள் பணியாற்ற வேண்டிய கடமை உணர்ச்சி பற்றியும் தெளிவாக விளக்கிப் பேசினர்.

பின்னர் தோழர் அன்புரோஸ் பேசினார்! இறுதியில் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பேசினார்!

அவர் பேசியதாவது—

பெரு மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பேரன்புகொண்ட வாலிப நண்பர்களே, வியாபாரத் தோழர்களே, பெரியோர்களே!

இந்தப் பகுதியிலே அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டத்தில் பேச நல்வாய்ப்பளித்த நண்பர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல நடைபாதையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் சார்பாகவும், சிறு சிறு கடை வியாபாரிகள் சார்பாகவும் மாலை அணிவித்து, மதிப்பு அளித்ததற்காகவும் அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

இங்கே இருக்கின்ற தோழர்கள், இந்தக் கூட்டத்தை பொங்கல் விழா என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதைக் காணுகின்றபோது பலருக்கு சந்தேகம் எழுகின்றது! காரணம், பொங்கல் தினம் கடந்து பல நாட்களாகி விட்டன! இப்பொழுது பொங்கல் விழா காலங் கடந்து கொண்டாடுகிறார்களே என்று பலருக்கு ஐயப்பாடு இருக்கும்!

இவ்விழாவை ஏற்பாடு செய்திருக்கும் தோழர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை வலியுறுத்திப் பேசும் வாய்ப்பினை அளித்திருக்கிறார்கள்! எனக்கு முன்னால் பேசிய பல தோழர்கள் கழகக் கருத்துக்களை சுருக்கியும் விளக்கியிருக்கிறார்கள்!

கழகத்தின் கருத்துக்கள் ஏற்கெனவே தெளிவு பெற்றிருக்கிறது! திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கு மேலும் ஆதரவைத் தேடுவதற்காகத்தான் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்களே தவிர; மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு பதில் அளிக்க அல்ல!

எனவே, மாற்றுக் கட்சிக்காரர்கள்—தாக்கிப் பேசுவார்கள் என்று நினைத்தால், தாக்கிப் பேச நாம் தயாராக இல்லை!

தாக்கிப் பேசுவதென்பது யாராலும் முடியும்! என்னைப் பொறுத்த வரையில் கொஞ்சம் சரளமாகவே பேச முடியும்!

அவர்கள், நம் கழகத்தின் கொள்கைகளை தாக்கிப் பேசினால் நாமும் பேசுவோம்; அதற்கு மாறாக, திராவிட முன்னேற்றக் கழக பேச்சாளர்களையோ, தலைவர்களையோ இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள்! இதே முறையை நாமும் கைப்பற்றினால் அரசியலிலே அராஜகத்தனத்தை செய்தவர்களாவோம்!

நாம் தாக்கிப் பேசாததற்கு இரண்டாவது காரணம், நாம் தாக்கிப் பேசினால், அவர்கள் தாங்கமாட்டார்கள் — இதை காங்கிரஸ் கட்சியிலே உள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்!

காங்கிரஸில் அளகேசன் தலைமை ஏற்ற பிறகு, நாட்டிலே புதிய சூழ்நிலை உண்டாகியிருக்கிறது! காங்கிரசில் இப்போது பல ரௌடிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஏன்?

மதுரையில் பல ரௌடிகள் காங்கிரசிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்! இதைப்பற்றி அவர்கள், எனக்கு தெரிந்த நண்பரிடத்திலே சொன்னார்களாம்—

'நாங்கள் காங்கிரசிலே சேர்ந்தது அவர்களிடத்திலே உள்ள லட்சியத்திற்காக அல்ல—நாங்கள் பல வியாபாரங்கள் செய்கிறோம்! அவைகளை சட்டம் அனுமதிக்காது! அதிலே இருந்து தப்புவதற்காக காங்கிரசிலே சேர்ந்திருக்கிறோம்' என்றார்களாம்! இது மதுரையை பொறுத்த வரையிலும் சரி! மாநிலங்கள் முழுமைக்கும் ஒத்து வருமா?

பல ரௌடிகளை காங்கிரஸில் சேர்த்துக் கொண்டு இளைஞர் காங்கிரஸ், என்று பெயர் வேறு வைத்திருக்கிறார்கள். ரௌடிகள் எல்லாம் காங்கிரசிலே சேர்க்கப்பட்டு வருகின்ற செய்தி தினம் தினம் வந்த வண்ணம் இருக்கின்றன, காரணம், அது ரௌடிகளின் தனி இயக்கமாக இருக்கிறது! மாநிலத்திலே எத்தனை ரௌடிகள் இருக்கிறார்கள் என்பதை அவர்களே கணக்குக் காட்டுவார்கள்! அந்த அளவு அநாகரீக முறை காங்கிரசில் வளர்ந்து விட்டது! காங்கிரசின் தரம் இத்துணை அளவு தரம் தாழ்ந்து போய்விடக் கூடாது!

இந்த விபரீத விளையாட்டு தற்காலிக சாந்திக்காக வேண்டுமானால் இருக்கலாம், காலம் முழுமையும் இதை நம்பி இருக்க முடியுமா? இதை அரசியல் கட்சியின் பெரும் தலைவர்கள் உணர வேண்டும்!

ரௌடிகள்தான் தாக்குகின்றார்கள் என்றால், புதிதாக கிளம்பியிருக்கும் ரெக்ரூட்டுகள்கூட தாக்குகிறார்கள். இப்போது சில அமைச்சர்கள்கூட போட்டி போட்டுக்கொண்டு ஒலிபெருக்கி முன் நிற்கின்றார்கள்! அதிலே காமராசரும், கக்கனும் தனி இடம் பெற்றிருக்கின்றனர்!

காமராசர் ஒரு வாரத்திற்கு முன்னால் திருச்சிக்கு அடுத்த ஸ்ரீரங்கத்தில் பேசும்போது—திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் கொளுத்துகிற வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பேசினார்!

பாரதத்தின் தலைவர் பண்டித நேரு, கடந்தஆண்டு ஜனவரி திங்கள் ஆறும் தேதி சென்னைக்கு வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புக் கொடி காட்டினார்கள், இரண்டு பஸ்கள் கொளுத்தப்பட்டதற்கு தி. மு. க.தான் காரணம் அதை நினைவூட்டுகிறேன் என்றார்! அந்தச் செய்தியை நீங்கள் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள் என்றும் மனதார நம்புகிறேன்! ஏன் பேசினார்? ஞாபக மறதியினாலா? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு களங்கம் உண்டாக்க வேண்டுமென்பதற்காகவே இப்படி பேசுகிறார்!

பஸ் கொளுத்தப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்கு கொண்டிருக்கும் 96 தி. மு. க, தோழர்களை பொறுக்கியெடுத்து பஸ் கொளுத்திய குற்றத்திலே ஈடுபடுத்தி வழக்கு தொடர்ந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள்—'கல்லெறிந்தவர்களை கயவர்களென்பேன் ஜனவரி மாதம் மூன்றும் தேதி மட்டும் என்னை பேச அனுமதித்து இருப்பீர்களானால் கண்ணியமாகவே முடிந்திருக்கும். அரசியல் போராட்டத்தை தனக்காக பயன்படுத்திக் கொள்ள கயவர்கள் உருவாவது இயற்கை! நாங்கள் கைது செய்யப்படாமலிருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இதற்கும் இம்மியளவும் தொடர்பு இல்லை' என்று திருவல்லிக்கேணி கடற்கரைகூட்டத்தில் விளக்கம் தந்தார். அரசியலில் நேர்மை உள்ளவர்களாக இருந்தால் அவர் சொன்ன விளக்கத்தை உணர்ந்திருப்பார்கள்.

கழகப் பொது மேடைகளிலும் இதுபற்றி விளக்கி வந்தோம். நாட்டு மக்களும் நாம் சொன்னக் கருத்துக்களை ஒப்புக் கொண்டார்கள்.

வழக்கு மன்றத்திலே வாதாடினார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் நிரபராதி என்று தீர்ப்பு வழங்கினார் நீதிபதி. ஆனால் காமராசர், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள்தான் பஸ்ஸை கொளுத்துவதற்கு காரணம் என்று திருச்சியிலே பேசியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகு, காமராசர் பேசி இருக்கிறார் என்றால் நீதிபதியை சவாலுக்கு அழைக்கிறார் என்றுதான் அர்த்தம்.

நீதியின்பால் பற்றுள்ளம் கொண்டவர்களாக இருந்தால்—முடிந்தால் காமராசரை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துங்கள்.

பஸ் கொளுத்தப்பட்ட சம்பவத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தொடர்பு இல்லை என்று நீதி வழங்கியதற்குப் பிறகு, காமராசர் தி. மு. கழகத்தவர்கள்தான் காரணம் என்று கூறுவது முதல் குற்றம்.

நீதிபதி தீர்ப்பு வழங்கிய பிறகு மறைமுகமாக பேசுவது இரண்டாவது குற்றச்சாட்டு. இதை கூறுவதற்கு காரணம்; காமராசர் எத்தகைய இழிசெயலில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை தெளிவாக்கத்தான்!

டில்லியிலே இருக்கிற நேருதான் காமராசருக்கு ஆண்டவன்! அவர், நான் சொன்ன முதன் முறையைக் கையாண்டார்!

முந்திரா என்கின்ற பயங்கர மனித உருவம் கோடிக்கணக்கில் மக்கள் பணத்தை விழுங்கி ஏப்பம விட்டுக் கொண்டிருந்தது! முந்திரா வழக்கில் விவியன் போஸ், முந்திரா குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கிய போது "இது முட்டாள் தனமான தீர்ப்பு" என்று பேசியவர் பண்டிதர் நேரு!

(8-ம் பக்கம் பார்க்க)

நகர சபையில் தி.மு.கழகம் சமர்பிக்கும் பெருமை தரும் முதல் பட்ஜெட் !

குறைந்த வாடகை வரும் வீடுகளுக்கு வரி குறைப்பு !

மருத்துவர், சலவைத் தொழிலாளர்கள், அங்காடி கடையினருக்கு வரியில் பெரும் சலுகை !

200 ரூபாய் வருவாய் உள்ளவர்களுக்கு தொழில் வரி ரத்து !

மருந்தகம்-தாய், சேய் நல விடுதிகள் திறக்க பல இடங்களில் ஏற்பாடு !

நிதிக்குழுத் தலைவர் முனுசாமிக்கு எங்கள் பாராட்டு !

சென்னை நகராட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது முதல் பட்ஜெட்டை நகர சபையில் சமர்பித்து பெருமையடைந்திருக்கிறது!

1960-61ம் ஆண்டிற்கான சென்னை நகர சபையின் வரவு—செலவு திட்டத்தை நிதிக்குழுத் தலைவர் திரு. வி. முனுசாமி அவர்கள் சபையின் முன்பு வைத்து நீண்டதொரு சொற்பொழிவும் ஆற்றியிருக்கிறார்!

சென்னை நகரசபை சரித்திரத்திலேயே இந்த வரவு—செலவுத் திட்டம் போற்றத் தகுந்தது, பாராட்டத் தகுந்தது, மகிழத்தகுந்தது என்று கூறினால் அது உண்மையிலேயே மிகையாகாது!

தென்னகத்திலேயே பெரும் விடுதலை இயக்கமாக விளங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகம்-வருங்காலத்தில் தமிழ் மாநிலத்திற்கே பட்ஜெட்டை தயாரித்து சமர்பிக்க இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம்—அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நிதிக்குழுத்தலைவர் திரு.முனுசாமி தயாரித்து சமர்பித்திருக்கும் இந்த வரவு-செலவு திட்டம்-நம்மை யார் என்பதை நாம் யாருக்காக வாழ்கிறோம் என்பதை, நாம் எவருக்காக பணிபுரிந்து வருகிறோம் என்பதை தெளிவாக விளக்கிக் காட்டி இருக்கிறது! நாம், எதிர்காலத்தில் என்னென்ன செய்வோம் என்பதற்கு இந்த பட்ஜெட் முன்னறிவிப்பாக விளங்குகிறது!

1960-61-ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகிற

வருமானம் ரூ 3,92,25.000
செலவு ரூ 4,0375,210
இறுதி இருப்பு
பற்றாக்குறையாக ரூ 11,50,210

ஏறத்தாழ பதினோரு இலட்சத்திற்கு மேல் துண்டு விழும் பட்ஜெட்டாகத் தான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது! "பற்றாக்குறை பட்ஜெட்டுக்கா இந்த பெருமை" என்று சிலர்—அல்ல, பலர் கேட்கக் கூடும்!

வசதியும். வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள பல்வேறு வழிகளும், அதற்கான எல்லா அதிகாரங்களையும் படைத்த மத்திய சர்க்காரே 84 கோடி ரூபாய்க்கு துண்டு விழும் பட்ஜெட்டை தயாரித்திருக்கிறது என்றால்-அதிகாரம் சிறிதும் இல்லாத, வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வழி இருந்தும் சுதந்திரமாக ஏதும் செய்ய முடியாத நகரசபை துண்டு விழும் பட்ஜெட்டை தயாரிப்பது அதிசயமல்ல, ஆச்சரியப்படத் தக்கதுமல்ல!

துண்டு விழுகிறதே என்பதற்காக ஏழைகளை வாட்டி வதைக்க முன்வரவில்லை! அவர்களுடைய வாட்டத்தைத் தான் போக்கி இருக்கிறது!

தங்களுக்குள்ள அதிகார எல்லைக்குட்பட்டு பெரும் பணம் படைத்தவர்களிடம் வருமானத்தைப் பெற்று, ஏழைகளின் மூலம் வசூலிக்கப்படும் வரியை குறைத்து ஏழைகளுக்கு வாழ்வளிக்க நகர சபை நிதிககுழுவினர் முன் வந்திருக்கின்றனர்!

அங்காடி கடைக்கு வரி குறைப்பு!

பெட்ரோலியம், மண்ணெண்ணெய் உட்பட பலதரப்பட்ட தொழில்களின் மீது விஞ்ஞான ரீதிப்படி சில திருத்தங்களை செய்துவிட்டு—சிறு சிறு குடிசைத் தொழில்களுக்கு 25 சதவிகிதம் கட்டணத்தை குறைத்திருக்கிறது.

முடிதிருத்த நிலையங்களுக்கும், சலவையாளர்களுக்கும், ஆப்பக்கடை போன்ற வருமானம் குறைந்த மக்களுக்கும் கட்டணத் தொகை குறைக்கப் பட்டிருக்கிறது! முன்பெல்லாம் இவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகை ரூ, 7 ஆகும். இப்போது ஒரு ரூபாய் மட்டும் வசூலிக்க முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

வீட்டு வரி!

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500-ம் அதற்குக் குறைந்த—அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ. 47-ம் அதற்குக் குறைவாகவும் வாடகை வரக்கூடிய வீடுகளுக்கு இதுவரை பதினேழரை சதவிகிதம் வரி வசூலிக்கப்பட்டு வந்தது! இந்த நடப்பு ஆண்டில் பதினைந்தரை சதவிகிதம் அதாவது இரண்டு சதவிகிதம் வரி குறைப்பு செயயப் பட்டிருக்கிறது! "இரண்டு சதவிகிதம் வரி குறைப்பதில் என்ன பெருமை இருக்கிறது" என்று கேட்கலாம்! அதற்கு மேல் வரியை குறைக்க நகர சபைக்கு அதிகாரம் கிடையாது! ஆட்சியாளர் அந்த அதிகாரத்தை வழங்கினால் மேலும் குறைக்கப்படலாம்!

நகரின் சுகாதாரத்தை பாதுகாக்கவும், சுகாதார வசதிகளை பெருக்கவும்—அதே போல் தண்ணீர் வசதியை பெருக்கவும்—அதே போல் தண்ணீர் வசதியை பெருக்கவும் இந்த பட்ஜெட்டில் பெருமளவு ஆக்கமளிககப் பட்டிருக்கிறது!

மருத்துவ விடுதி மருந்தகம்!

ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு மருந்தகமும், தாய், சேய் நல விடுதியும் ஏற்படுத்த வேண்டும் என்பது தான் நகர சபை ஆட்சியாளரின் ஆசையாகும்! என்றாலும் பொருளாதார நிலை காரணமாக சிலவற்றை செய்ய முன் வந்திருக்கின்றனர்!

(7-ம் பக்கம் பார்க்க)

ஒழுக்கங்கேடான காரியங்களுக்கு எங்கள் பணி பயன்படாது!

(அண்ணு பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது நண்பர் வேணுகோபால் அவர்கள் தாம் அமைத்த இந்த உருவத்தைக் காண என்னை அவர் இல்லத்திற்கு அழைத்துச் சென்ருர்.

உருவத்தை நன்ருகப் பார்த்தேன். அந்த உருவத்திலுள்ள கருத்துக்களை ரசித்தேன், அதிலமைந்துள்ள அழகைக் கண்டு வியந்தேன். விளக்கங்களை கேட்டுத் தெரிந்தேன், வியந்தேன்.

வள்ளுவர் உருவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருப்பதை தெரிந்து கொண்டேன்,

பின்கால் விரல்களை இன்னெரு கால் விரலுடன் தொட்டுக் கொண்டிருப்பது போன்றிருப்பதைப் பற்றி ஓவியரை விளக்கம் கேட்டேன்.

ஓவியர் கூறினர், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் தாங்கள் நல்ல கருத்துக்களைப் பற்றி எழுதும் போது, கருத்துக்களைப் பற்றி நினைத்து சிந்திக்கும் போது, சிந்தனையாளர் ஒருகாலின் விரலை ஆட்டிக் கொண்டு சிந்திப்பார்கள். அப்போது மற்ெருரு காலின் விரல்கள் தாங்கி, தடுத்து நிறுத்தும் என்றுஓவியர் கூறினர்.

இப்படியே ஓவியத்தின் அமைப்பு ஒவ்வொன்றும் அமைந்திருக்கிறது. உருவ அமைப்பு எடுத்துக் காட்டுகிறது.

நமது ஓவியர் வேணுகோபால் நல்ல முறையில் பாடுபட்டு வரைந்திருக்கிருர். உள்ளத்தில் மனதில் எண்ணியபடி மனக்கண் முன் கொண்டு வந்துஓவியத்தை உருவாக்கியுள்ளார்,

இன்று வள்ளுவருக்கு கிடைத்துள்ள பெருமையைக் கண்டு எண்ணி மகிழ்கிருேம், பெருமைபடுகிருேம், மகிழ்ச்சியடைகிருேம்.

இன்று நாட்டிலுள்ள வறுமையைப் போக்க, அரசுகள் எப்படி எப்படி இருக்கவேண்டும்என்று கூறிய வள்ளுவரை, நமக்காகப் பாடுபட்டவரை தள்ளப்பட்டு விட்டோமே என்று என் மனம் ஏங்கிற்று.

நான் இப்போது உங்களிடம் ஒரு செய்தியைத் துக்கத்தோடு கூறுகிறேன். மகிழ்ச்சியோடு கூற வரவில்லை. துயரோடு தான் கூறுகிறேன்.

என் வீட்டிற்கு என்னைக்காண ஒரு புதியவர் வந்திருந்தார். மெல்லிய உடல், சிறு துண்டை மேலே போட்டுக் கொண்டு கூச்சம் நிறைந்து அடக்க ஒடுக்கத்துடன் இருந்தார். அவரைக் காணும் போது வறுமையால் பீடித்திருக்கிருர். வறுமை வாட்டுகிறது என்பதை அவரது நிலை எடுத்துக் காட்டிற்று.

அவர் கையில் ஒரு புகைப் படம் வைத்திருந்தார் அதை என்னிடம் காட்டி, நான் முன் நன்ருக இருந்தேன். இப்போது வறுமைத் தொல்லையில் சிக்கி வாடுகிறேன்.

குடும்பம் கஷ்டப்படுகிறது என்று வருத்தத்தோடு கூறினர். அவர் காட்டிய படத்தில் பெரியார், அவர் பக்கத்தில் நான், என்னிடம் வந்த அந்தப் புதியவர் மற்றும் பல நண்பர்கள் இருக்கிருேம் அவர் அந்தப்படத்தைக் காட்டி என்னிடம் அவர் அறிமுகப் படுத்தவே கொண்டு வந்திருக்கிருர்,

அவர் கூறியதிலிருந்து அவரது நிலை கோரமாக இருப்பதையும், அவரது வாழ்க்கை சிதைந்திருப்பதையும் அறிந்தேன். அவர் தன்னைக் காப்பாற்ற வழி செய்யவே என்னிடம் வந்திருக்கிருர் என்பதையும் உணர்ந்தேன். இதை எதற்காக இங்கு கூறுகிறேன் என்ருல் இன்று நாட்டிலுள்ள வறுமை நிலையை உணர்த்தவே இதைக் கூறுகிறேன்,

வள்ளுவர் நமக்கு—நமது மக்களுக்குத் தந்த நல்லுரைகளை எடுத்துக் கூற வள்ளுவர் உருவம் நமக்கு வழி காட்டுகிறது.

அந்தப் புதியவர் எப்படி தன்னிடமிருந்த படத்தைக்கொண்டு அவருடன் நான் படத்தில் இருப்பதை காட்டி அறிமுகப்படுத்திக் கொண்டாரோ, அதுபோல் நமக்கிருந்த வலிவை—உயர்வை நாம் பெற்றிருந்த மேன்மையைஎடுத்துக் கூற, இந்த உருவம் நமக்கு பயன்படுகிறது. இன்றிருக்கும் துன்பம், இழிவு போக்க—வழி காண இந்தவுருவம் வழி காட்டுகிறது.

நம்மிடம் குறள் போன்று பல நூல்கள் இருக்கிறது. அது பல ஜாதிகளைக் காட்டிப் பிரிக்கும் தன்மையில் இருக்கிறது. அவைகளையெல்லாம் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

குறள் ஒன்றுதான் எல்லோரும் இன்புற்றிருக்க ஒற்றுமைப்பட வாழ்க்கைக்கு வழி காண்பதற்கான முறையில் இருக்கிறது, ஆகவே அதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியும்.

வள்ளுவர் காலத்தில் நம்முடைய நிலை எப்படி இருந்தது, இப்போது நாம் எப்படி இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் நமக்கு மிக வெட்கமாக இருக்கிறது.

இந்த ஓவியத்தைப் பற்றிக் கூறுவதற்கான திறமை எனக்கில்லை! அப்படி கூறுவதற்கு நான்ஓவியனல்ல. அதேபோன்று குறளின் மேன்மையைப் பற்றிக் கூற நான் பெரும் இலக்கியக் கலைஞனுமல்ல,

ஆனல் நாட்டிலுள்ள நிலையை உணர்ந்து வள்ளுவர் கூறியிருக்கும் கருத்துக்களின் பொறுத்தங்களை உணர்ந்தே நான் இங்கு நிலைமைகளைக் கூறுகிறேன்.

வள்ளுவர் கூறியிருக்கும் "பிறப்பொக்கும்" என்ற பாடல் எப்படி நமக்கு நல்வழி காட்டுகிறது என்பதைக் கவனியுங்கள்.

அந்தப் பாடலில் கூறியிருக்கும் கருத்தைக் கவனித்தால் நாம் எப்படி இருந்தோம், எப்படி இருக்கிருேம் என்பதை நன்கு உணர்த்தும்.

ஜாதிப் பிரிவுகள், குலப் பெருமைகள் இவைகளையெல்லாம் வள்ளுவர் எப்படி இடித்துரைக்கிருர் என்பது விளங்கும். இது நமக்கு வியப்பையும் தரும்.

இந்த ஓவியத்தைப் பார்க்கும் போது, நமக்கு கருத்துகளை உணர்த்தும்படி பார்க்க வேண்டும்.

நாம் முன்பிருந்த நிலை, நாம் வாழ்ந்த வாழ்வு இவைகளையெல்லாம் எடுத்துக் காட்டுவதற்கு இந்த ஓவியம் பயன்பட வேண்டும். ஒரு மங்கையின் உருவத்தை ஒரு ஓவியன் வரைந்தால் அது எப்படி இருக்க வேண்டும்.

ஒரு அழகிய மங்கை ஒரு சோலையில் பூப்பறிக்கும்படி நீட்டி அதைப் பறிக்கும்போது ஏற்படும் நிலையை உணர்த்தும் வகையில் உருவம் தீட்ட வேண்டும்.

இன்று நமது நிலையை உணர்த்தும் ஒரு துவக்க நாள், இது நமக்கு ஒரு ஆரம்ப கட்டம்.

ஒரு புத்தகத்திற்கு முதலில் ஒரு அட்டை அமைகிறதோ, அப்படி நமக்கு இன்று அமைந்திருக்கிறது.

இப்போதுதான் நமக்கென்று ஒரு விழா அமைந்திருக்கிறது. அதன் பின்னர்தான் ஆடல், பாடல்கள் இருக்கும்,

(10-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நகரின் வடக்கு, தெற்கு, மேற்கு, மத்திய பகுதி ஒவ்வொன்றிலும் ஒரு மருந்தகமும், அதற்கான கட்டிடங்களைக் கட்டவும் முன் வந்திருக்கிறது!

அதே போல் அந்த நான்கு பகுதிகளிலும் நான்கு, தாய், சேய் மருத்துவ விடுதிகளை திறக்கவும், அதற்கான கட்டிடங்களை கட்டவும் முன் வந்துள்ளது! மற்றும் எல்லாவிதமான சுகாதார வசதிகளையும் கவனிக்க இந்த பட்ஜெட்டில் வசதி செய்யப்பட்டிருக்கிறது! சுகாதார வசதிக்காக பொதுவாக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ 46,93,100!

விளக்குகள்

சென்னை நகரத்தின் தெருக்களில் அமைக்கப்பட்டிருக்கிற விளக்குகளை அபிவிருத்தி செய்ய 2,35,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது! நாகரீகம் முதிர்ச்சி யடைந்துள்ள இந்த காலத்திலும் மண்ணெண்ணெய் விளக்குகள் இருக்கின்றன! இதை படிப்படியாக அகற்ற ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது!

பொதுவாக விளக்கு அமைக்கும் வேலைகளுக்காக இந்த பட்ஜெட்டில் 19,44,410 ஒதுக்கப்பட்டிருக்கிறது!

தண்ணீர் வசதி

தண்ணீர் வசதி செய்து தருவதற்கும், வடிகால் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் பெரும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது! தண்ணீர் வசதி அளிக்க, அதற்காக குழாய்களைப் புதைக்க நான்கு இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது! வடிகால் வசதிக்காக ஐந்து இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது! மொத்தம் தண்ணீர் வசதிக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை 37,40,450 ஆகும்!

மாணவர்களுக்கு நடுப்பகல் உணவு

ஏழை மாணவர்களுக்கு நடுப்பகல் உணவளிக்க 6,99,300 ஒதுக்கப்பட்டுள்ளது! 34,000 மாணவர்களுக்கு இது போதுமானதல்ல என்ருலும் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிக தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது நமது முழு எண்ணமும் நிறைவேற வேண்டுமானல் நாம் மாநில அரசிலும் அமர வேண்டும்!

இதைத் தவிர பலவேறு விதமான நன்மைகளை, பயனை அளிக்கும் விதத்தில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது!

வருமானத்தை பெருக்கவும் பல வழிகள் செய்யப்பட்டிருக்கின்றன! மின்சார உற்பத்தி, அச்சகம் ஏற்படுத்தல் முதலிய பணிகளை மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது!

மொத்தத்தில் தி.மு.க. சமர்பித்திருக்கும் இந்தமுதல் பட்ஜெட் ஏழைகளுக்கு நன்மை தரும் பட்ஜெட்டாக, நகருக்கும் நகர மக்களுக்கும் பெருமை தரும் பட்ஜெட்டாகவே அமைந்திருக்கிறது!

இப்படி நல்லதொரு பட்ஜெட்டை, நகர் சீர்படத்தக்கதோர் பட்ஜெட்டை தயாரித்து தி.மு.க. வுக்கு பெருமையையும், சென்னை நகரசபைக்கு மதிப்பையும் உண்டாக்கித் தந்த நிதிக்குழு தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் பொதுவாக நகரசபை உறுப்பினர்களுக்கும், மேயர், ஆணையாளருக்கும் நாங்கள் பொது மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

எதிர்க் கட்சித் தலைவர்களை மதிக்கின்ற மனோபாவம் ஆட்சியாளருக்கு ஏற்பட வேண்டும்!

(மனோகரன் பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கண்ட நீதிபதிகள் ஒன்று சேர்ந்து, இப்படி கூறினால் நீதி என்ன ஆ[illegible]' என்று நீதிபதிகள் அனைவரும் ஒன்று கூடி போராடிய பிறகு பண்டித நேரு 'சொன்னது தவறு' என்று மன்னிப்புக் கடிதம் எழுதினார்!

காமராசர் இரண்டாவது முறையை பின்பற்றி இருக்கிறார்! மன்னிப்பு கேட்டுக்கொள்ளுங்கள் என்றால் சொன்னது தவறுதான் என்று சொல்லக் கூடும்! துணிந்து தவறு செய்து விட்ட. பிறகு மன்னித்து விடுங்கள் என்று மன்னிப்பு கேட்பது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது!

இருக்கின்ற மந்திரிகளிலேயே கொஞ்சம் புத்திசாலி என்று மதிக்கப்பட்டு வந்த வெங்கட்ராமனைகூட, எட்டு பேரில் உள்ளடக்கியே பேசவேண்டி வருகிறது!

ஒரு கூட்டத்தில் அவர் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் அடுக்கு மொழி பேசுவதால் மட்டும் பிரச்னை தீராது!

தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு என்று பேசுவது அடுக்கு மொழியாகுமா? இப்படி ஒரு கேள்வி கேட்டு அங்கே உள்ளவர்களின் கைத் தட்டலைப் பெற்று, அரசியல் கிளர்ச்சி நடிகன் போல் திரும்பியிருக்கிறார்!

தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு—இது வெறும் அடுக்கு மொழி மட்டுமல்ல, அர்த்த புஷ்டியுள்ளதாகும்! அவர்கள் பேசுகின்றார்களே, அண்டா, குண்டா என்பதுதான் அர்த்த மற்ற மொழி!

"தட்டினால் தங்கம்" என்பதை அமைச்சர் அவர்கள் இருபத்தி நான்கு மணி நேர யோசனைக்குப் பிறகு கண்டு பிடிக்க முடிந்தது!

தட்டினால் தங்கம் இடித்தால் இரும்பு என்பதை மட்டும் தான் அவரால் கண்டு பிடிக்க முடிந்தது.

தோண்டினால் தூரி, மூழ்கினால் முத்து—இதையும் இன்னும் மேற்கொண்டு தேவை என்றால் நண்பர் கருணாநிதி அவர்களிடம் பாடம் கற்றுக் கொள்ளட்டும்!

இரண்டாவதாகவும் கூறியிருக்கிறார். நான் உலகத்தில் பல இடங்களுக்கு சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் தட்டினால் தங்கம். இடித்தால் இரும்பு என்றால் கேலி செய்கிறார்கள்,

தட்டினால் தங்கம் கிடைக்கும் இடித்தால் இரும்பு கிடைக்கும் என்று சொன்னது உண்மை தான்! உம்மை இடிக்க சொன்னதும், தட்டச் சொன்னதும் தமிழ்நாட்டில்தான்! இங்கிலாந்தில் அல்ல!

சிலநாடுகள் பால்கட்டியை நம்பி வாழ்கின்றன! சிலநாடுகள் இரும்பை நம்பியே வாழ்கின்றன சிலநாடுகள் தங்கத்தை நம்பியே வாழ்கின்றன. சிலநாடுகள் நிலக்கரியை நம்பியே வாழ்கின்றன. இவை அத்தனையும் ஒன்று சேர ஒரு இனத்தார், ஒரு நாட்டார் பெற்றிருக்கின்றனர், அந்த திராவிடத்தை தான் நாம் பெற வேண்டும் என்று கூறி வருகிறோம்.

அவர் கூறுவதை வாதத்திற்காக ஒப்புக் கொள்ளுகிறேன்.

தட்டினால் தங்கம் கிடைக்கும் என்று கூறினார்களே என்று இங்கிலாந்திலே போய் தட்டியிருந்தால் கரங்களை வெட்டியிருப்பார்கள். இடமறிந்து தட்டி இருந்தால் இன்பம் கிடைத்திருக்கும்—இரும்பு கிடைத்திருக்கும்! மற்ற இடத்தில் இடித்தால் இடுப்புத்தான் ஒடியும்!

ஏசிப் பேசுகின்ற மாற்றுக்கட்சிக்காரர்கள் கழகத்தின் கொள்கையிலே இருக்கின்ற கேடுபாடுகளை விளக்கிக் கூறட்டும். மனதார ஒப்புக் கொள்கிறேன் அதை விட்டு அவர் இப்படி, இவர் இபபடி என்று கூறுவது அரசியல் கட்சிக்கே அநாகரீகம்.

திராவிட நாட்டில் வளமில்லை என்று கூறுகின்றவர்கள் உருப்படவே மாட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன் சொன்னான் என்பதற்காக தட்டினால் தங்கம் கிடைக்குமா, இடித்தால் இரும்பு கிடைக்குமா என்று பேசினால் உங்களைத்தவிர துரோகிகள் வேறு யார் இருப்பார்கள்?

மேலே வானம்—மேகங்களுக்கிடையே நிலவு நீந்திக் கொண்டிருக்கிறது. தென்றல் மெள்ள வீசிக் கொண்டிருக்கிறது! இதை அனுபவித்து தி. மு. க. தோழன் கூறினால் 'இல்லை இல்லை எங்களுக்கு சூடாக இருக்கிறது' என்றால் என்னவென்று சொல்லுவது? இப்படிப் பேசுவது அரசியல் விரகதாபம் உடையவர்கள் என்றுதானே பொருள்?

கடலிலே மூழ்கி எடுத்தால் முத்து கிடைக்கும் என்கிறோம். நீங்கள் கடலைப் பற்றியும், முத்தைப் பற்றியும் படிக்காதவர்கள். நீங்கள் அரசியலிலே பாலைவனக் கருத்துப் பாடம் படித்தவர்கள். அங்கே ராஜபுதன பாலைவனம் இருக்கிறது! இங்கே பாலைவனம் இல்லை. இங்கே உள்ள ஜீவ நதிகள் அங்கே இல்லை! அங்கேயும் ஜீவ நதிகள் இருக்கின்றன; அங்கே இருக்கின்ற ஜீவ நதிகள் மக்களை அபாயகரமான நிலைக்கு இழுத்துச் செல்லுகின்றதே தவிர, மக்களை அரவணைத்துச் செல்லவில்லை! இங்கே இருப்பவை மக்களை அபாயத்திற்குள்ளாக்காதவை, மக்களை அரவணைத்து செல்லுபவைகளாகும்!

இங்கு எல்லா வசதிகள் இருந்தாலும் நமது பொருளாதாரம் மிகவும்பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே இருந்து விடுபடத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் லட்சிய முர[illegible] முழக்கி வருகிறது!

அண்மையில் மேற்கு ஜெர்மனியிலே இருந்து பிரண்டானோ என்பவர் இங்குவந்தார். அடுத்து ரஷ்யாவிலே இருந்து குருஷேவ் வந்தார், பாரதம் வரவேற்றது! அவரை பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும்படி கேட்டுக் கொண்டது!

அவர் பாராளு மன்றத்தில் பேசும்போது ரஷ்யா ஏழாண்டு திட்டம் போட்டிருக்கிறது என்றும், அதில் ஒரு அம்சம் இந்தியாவுக்கு எவ்வளவு கடன் கொடுப்பது என்பது! ஏழாண்டு திட்டத்திலே இது ஒரு அம்சம் என்று குறிப்பிட்டார். இங்கே இருப்பவர்கள், எங்கே பிச்சை வாங்குவது என்று கையேந்த திட்டம் போடுகிறார்கள்.

பாராளு மன்றத்தில் உரை நிகழ்த்தியதும் குருச்சேவை பத்திரிகை நிருபர்கள் சந்தித்து, 'இந்தியாவுக்கு எவ்வளவு கடன் தரலாமென்று இருக்கிறீர்கள், நேரு, ஏதாவது கடன் கேட்டாரா, எத்தனை ஆண்டு கால தவணையில் தீர்ப்பதாக முடிவு செய்திருக்கிறார்கள்' என்று கேட்டார்கள், ஆட்சியாளர்கள் மடிப் பிச்சை ஏந்துகின்ற நிலையைப்போல் இவர்களுக்கும் அந்த பஞ்ச புத்தி வந்துவிட்டது போலும்!

இங்கே இருப்பவர்கள் மடிப் பிச்சை ஏந்துகிறார்களே தவிர, தன்மானத்தை நீட்டுகின்ற துணிவு இல்லை!

மேற்கு ஜெர்மனியைச்சேர்ந்த டாக்டர் பிராண்டானோ என்பவர் இந்தியாவுக்கு வந்தார். ஒன்றாக இருந்த ஜெர்மனி யுத்தத்திற்குப் பிறகு இரண்டு கூறாக பிரிந்து விட்டது. மேற்கு ஜெர்மனியின் சகடத்தை அமெரிக்கா சுற்றுவதாகவும், கிழக்கு ஜெர்மனியின் சகடத்தை கண்ணுக்குத் தெரியாமல் ரஷ்யா சுற்றி விடுவதாகவும் கூறப்படுகிறது!

ஹிட்லருக்குப் பின்னால் ஜெர்மனியின் பொருளாதாரத்தின் அச்சு முறிந்து விட்டது! உலக யுத்தத்தின்போது துடித்த துடிதுடிப்பு வேறெந்த நாடுகளும் அத்தகைய தொல்லையை—துன்பத்தை அடைந்திருக்க முடியாது! அந்த ஜெர்மனி, படுகாயம் ஆறுவதற்கு முன்னாலே எப்படி இருந்தது இப்போது எப்படி இருக்கிறது என்பதை விளக்கி "ஹிந்து" பத்திரிகை கட்டுரை ஒன்றை பிரசுரித்திருந்தது!

மேற்கு ஜெர்மனியில், ஹிட்லர் காலத்தில் கிடைத்த வருமானத்தை விட நான்கு மடங்கு, மேற்கு ஜெர்மனியின் தேசிய வருமானம் பெருகியிருக்கிறது.

அன்று தொழிலாளி ஒரு சிகரெட், இரண்டு சிகரெட் பிடித்தான் என்றால் இன்று,மன நிம்மதி பெறுகின்ற வரை சிகரெட் குடிக்கிறான்.

அன்று பெண்கள் தங்க நகைகள் இன்றி இருந்தார்கள், இன்று ஏராளமான நகைகள் அணிந்து இன்பமாக வாழ்கிறார்கள்.

அன்று தொழிலாளி துடித்து, வறுமையில் நெளிந்து புரண்டு கொண்டிருந்தான். இன்று இன்பத்திலே நீந்திக் கொண்டிருக்கிறான். அன்று தொழிலாளி எங்கு வாழ்வான், இருக்க இடம் எங்கே என்ற வீட்டுப் பிரச்னை தீராமல் இருந்தது. இன்று வீட்டில் ஆளுக்கொரு ரேடியோவும், இந்தியாவில் இன்னும் வராத டெலிவிஷனும் இருக்கிறது!

அன்று மருந்து போல் பீரை குடித்தான். இன்று நீர் போல் பீர் குடிக்கும் அளவு வளர்ந்திருக்கிறது!

மற்றவைகளை விட இப்போது அங்கே இருக்கும் பெரிய தொல்லை — தொழிலாளர்களின் காரை நிறுத்தி வைப்பது எங்கே என்பதாகும். இப்படி அந்தக் கட்டுரையிலே எழுதப்பட்டிருக்கிறது!

இத்தனைகளையும் நினைக்கும் போது ஜெர்மன் யுத்தத்தில் தவித்த தவிப்பை மறந்து விடக் கூடாது. எங்கே மாளிகைகள் அழிந்தனவோ, அங்கே தான் இன்று விண் முட்டும் மாளிகைகள் எழுந்திருக்கின்றன!

இந்தியா எந்தக் காரணத்தாலும் பாதிக்கப்படாத நாடு.

பன்னிரெண்டு வருட ஆட்சியிலே நாட்டில் என்ன சுபிட்சம் ஏற்பட்டு விட்டது! நேருவை தெய்வமாகக் கொண்டாடுகின்ற இந்த நாட்டில் ஒருகட்சி மெஜாரெட்டி பலத்தோடு ஆட்சியில் அமர்ந்து கொண்டு தங்களுக்கென்று வாய்ப்பு! வசதிகளை தேடிக் கொண்டாரே, தவிர நாட்டு மக்கள் நலிவை போக்கவில்லை!

இந்த நாட்டை விட்டு வெள்ளைக்காரன் வெளியேறியபோது ஸ்டர்லில் கணக்கில் ஏராளமான பணத்தை தோடிக் கணக்கில் வைத்து விட்டுப் போனான். அப்படியிருந்தும். இவர்கள் ஆட்சியில் இன்னும் நடைபாதை வியாபாரிகள் என்று பெயர் இருப்பது இவர்கள் ஆட்சியின் லட்சணத்தை விளக்கிக் கொண்டிருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை எதிர்க் கட்சிக்காரர்கள் ஜீரணிக்க முடியாது! திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து தவறு என்றால் மக்கள் அறிய தவறிப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஏராளமான ஆதரவை பெற்றிருக்கிறது!

இந்த ஆட்சியிலே உள்ளவர்கள் மக்களுக்கு அன்று பெற்றிருந்த பொருளாதார நிலையில் இருபத்தி ஐந்து சதவிகிதமாவது பொருளாதாரத்தை பேண வேண்டும், அந்த அக்கறை ஆட்சியாளர்களுக்கு இல்லை.

கேரளத்தில் அரசியல் அறைகூவல் விடப்பட்டது! கேரள தேர்தலில் கம்யூனிஸ்டும், காங்கிரசும் மற்றமற்ற கட்சிகளும் போட்டியிட்டன.

(12 ம் பக்கம் பார்க்க)

இன்சூரன்ஸ் கம்பெனி ஒரு ஊற்று—அதை நன்முறையில் பயன்படுத்தவும்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு வழியின்றி தடுக்கிறான் பூனை என்ன செய்யும்? தன்னை வாட்ட, வதைக்க, உயிரை போக்க ஒருவன் முனைந்திருக்கிறான் என்று உணர்ந்து விடுகிறது! மீண்டும் தப்பிக்க சந்து கிடைக்குமா? இடுக்கு கிடைக்குமா, பொந்து கிடைக்குமா என்று பூனை பார்க்கிறது! அதற்கும் வழியில்லை என்றால், ஒன்றுமே செய்வதற்கில்லை என்று தெரிந்தால், என்ன செய்யும். தைரியம் வருகிறது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பிறக்கிறது! தன்னை உடனே புலியாக எண்ணி மேலே பாய்ந்து சீறி விழுந்து எதிர்ப்பவன் கண்களைப் பிடுங்குகிறது.

இதற்குத் தான் "கோழையும் ஒரு நாள் வீரனாவான்" என்பது இந்த சூழ்நிலைக்கு ஆட்சியாளர்கள் இடந்தரலாகாது. என்றுமே ஊழியர்கள் சொன்ன வேலையைச் 'செய்து விட்டுக் கொடுக்கும் ஊதியத்தை வாங்கிக் கொள்பவர்களாக இருக்க மாட்டார்கள்

"சொன்னதைச் செய், கொடுப்பதை வாங்கிக் கொள்" என்ற மொழிகளைக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இருக்கின்ற நிலை! வாழ்க்கையில் இருக்கின்ற கொடுமைகள் தொல்லைகள் இவைகள் அவர்களை மாற்றிவிடும்.

"சொல்வதைச் செய்கிறோம் வாழ்வதற்கான முறையில் கொடு"

என்று கேக்க ஊழியர்கள் எண்ணி விடுவார்கள். முற்பட்டு விடுவார்கள்,

வாய் திறந்து எங்கள் வேலைக்கு இன்னது கொடு, இப்படித் தான் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்த முயன்று விடுவார்கள்.

இருண்ட வாழ்வில் ஒளி விழச் செய்ய உரிமையை நிலைநாட்ட முற்பட்டு விடுவார்கள்.

விரும்பும் கூலி கொடு,'உழைப்புக் கேற்ற ஊதியம் கொடு என்று கேட்பார்கள்.

பின் "சக்திக் கேற்ற உழைப்பு தேவைக் கேற்ற வசதிகள் தேவை" என்று கேட்பார்கள்.

இன்றைய நிலை சிப்பந்திகளை அந்நிலைக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டது. எப்பொழுதும் சொன்னதையேச்செய்துவிட்டுக் கொடுப்பதையே வாங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

என் சக்தி இவ்வளவு தான் இந்த வேலை தான் செய்ய முடியும் எனக்குத் தேவைகள் இன்னின்னவைகள் கொடுஎன்று கேட்கும் நிலையும் வந்து விட்டது.

'நான் நொண்டி, முடவன், படிக்காதவன் காவல் காப்பேன், எடுபிடி வேலை செய்வேன் என்னுடைய வாழ்வு நன்றாக இருக்க—மானத்தோடு இருக்கதேவைகள் இன்லின்னது கொடு"

என்று கேட்கவும் உறுதியும், வீரமும் இன்று மக்களிடம் பிறந்து விட்டது. நொண்டிக்கும் வயிறு உண்டு, முடவனுக்கும் வயிறு உண்டு! அவர்கள் இந்த நாட்டில் வாழ வேண்டும். அதற்கு வகை செய்து தான் கொடுக்க வேண்டும்.

ஓவியன், இசைவாணன் நடிகன் மற்ற யாவரும் தமது சக்திகளுக்கேற்றபடி தங்களுக்குத் தெரிந்தபடி தான் வேலை செய்ய முடியும்! அதனால் அவனது தேவைகளை மாற்ற முடியாது அவைகளைப் பெறத் தான் வேண்டும்.

நீங்கள் முனைந்தால், ஒரு மனதோடு — ஒற்றுமையாகப் பாடுபட்டால் உங்கள் கோரிக்கைகள் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை.

எனது நண்பர் தியாகராஜன் பேசும் போது நீங்கள் உறுதியோடு பாடுபட்டால், உங்களால் மற்றவர்களுக்கும் பயன் ஏற்படும் என்று கூறினார்.

நாம் நமது நூல்களில் கூறுவதையும் கவனிக்க வேண்டும்.

"நெல்லுக் கிரைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்கும் அங்கே பொசியுமாம்" என்ற பாடல் படி உங்களுக்கு நன்மை கிடைப்பதோடு மற்றவர்களுக்கும் வழி காட்டிகளாககத் திகழ வேண்டும்!

நமது அரசினர் மாநில அரசின் ஊழியர்களுடைய கோரிக்கைகளுக்கும், மத்திய அரசினருடைய நேர்மையான—நீதியான பிரச்சினைகளுக்கும் செவிசாய்க்க மாட்டார்கள்!

ரயில்வே ஊழியர்கள், தபால் தந்தி ஊழியர்கள் இன்சூரன்ஸ் ஊழியர்கள் இவர்களது குரல்களுக்குத் தான் செவி சாய்ப்பார்கள். ஆகவே உங்கள் குறைகளைப் போக்க நேர்மையோடும் பண்போடும் கண்ணியத்தோடும் அரசினர் காதில் விழும்படி பாடுபடுங்கள்! எடுத்துக் கூறுங்கள்! அரசினரும் செய்வார்கள்.

ஒரு குடும்பத்தில் மூன்று நான்கு குழந்தைகள் இருந்தால் அதில் முரட்டுக் குழந்தையை—மிரட்டிக் கேட்கும் குழந்தையைத் தான் மற்ற பிள்ளைகள் தனது தந்தையிடம் அனுப்புவார்கள்.

"நீ போய் கேள்! நீ கேட்டவுடன் தந்தை கொடுப்பார் உனக்குக் கிடைத்தால் எங்களுக்கும் கிடைக்கும்" என்று மற்ற பிள்ளைகள் அந்த மிரட்டல் பிள்ளையிடம் கூறுவார்கள்.

ஆகவே இதை உணர்ந்து பாடுபட வேண்டுகிறேன்.

நமது நண்பர்கள் ஆட்சியாளர்களின் நிர்வாக ஊழல்களையும், நிர்வாகத் திறமையற்ற நிலையையும் நன்றாக விளக்கினார்கள்.

ஆயுள் இன்சூரன்ஸ் நிர்வாகம் வற்றாத ஓர் ஊற்று. அதை நல்ல முறையில் பயன்படுத்தினால் அரசினருக்கு நல்ல பயனை அளிக்கும் அதன் வருவாயைக்கொண்டு நல்ல திட்டங்களை உருவாக்கலாம். நாட்டிற்கு நல்ல தொண்டுகளைச் செய்யலாம்.

ஊற்றைத் தோண்டி எடுத்து தண்ணீர் நன்றாக வரும் படி செய்ய வேண்டும்! மண் தெரியாது கற்கள் பக்கத்தில் விழாது தோண்ட வேண்டும். ஊற்றில் மண் விழாது தோண்ட வேண்டும. அந்த ஊற்று மக்களுக்குப் பயன்படும்படி செய்யலாம்.

இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஊற்று கிணறு! அதில் நல்ல வருவாய் வருகிறது!

அந்த வருவாய் வீணான முறையில் போகும்படியாகப் பார்த்துக் கொள்ளக் கூடாது.

ஆட்சியாளர்கள் பலபகற் கனவுகளைக் கண்டு வருகிறார்கள். பல திட்டங்களைத் தீட்டுகிறார்கள்! வெளி நாடுகளில் கடன் வாங்குகிறார்கள். அதற்கு ஏராளமாக வட்டி கட்டி வருகிறார்கள். ராணுவத்திற்கு கோடிக்கணக்காகப் பணம் செலவழிக்கிறார்கள்! ஆனால் இங்குள்ள தனது சிப்பந்திகளை கவனிப்பதில்லை.

மேலை நாடுகளில் ராணுவத்திற்குப் பணம் செலவழிக்கிறார்கள் என்றால் ராணுவத்திற்கு வேண்டிய சாமான்களை அவர்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்கிறார்கள்,

அவர்கள் நாட்டிலேயே ராணுவத்திற்கு வேண்டிய தளவாடங்களை உற்பத்தி செய்கிறார்கள்! இரும்பு உற்பத்தி செய்கிறார்கள்!

நாம் வேறு நாட்டிலிருந்து எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்! இங்கிருந்து நமது பணம் வேறு நாட்டிற்குப் போகிறது!

நோட்டடித்து விட்டதால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது! அந்த நோட்டிற்கு மதிப்பு ஏற்பட வேண்டும்! நமது நாணயத்திற்கு செல்வாக்கு இருக்க வேண்டும்!

நமது நாட்டிலுள்ள நிர்வாகம் வேலியே பயிரை மேயும் நிலையிருருக்கிறது! பயிரைங் காப்பாற்றத்தான் வேலி கட்டுகிறோம்! காப்பாற்றக் கட்டியிருக்கும் வேலியே, பயிரை மேய்ந்து விட்டால் நிலைமை என்னவாகும்! இன்று ஆட்சியாளர்களிடத்தில் எல்லோரும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள்!

சர்க்கார் சிப்பந்திகளுக்கு அதிருப்தி, பாங்கு சிப்பந்திகளுக்கு அதிருப்தி, மத்திய அரசாங்க சிப்பந்திகளுக்கு அதிருப்தி தபால் சிப்பந்திகளுக்கு அதிருப்தி ரெயில்வே சிப்பந்திகளுக்கு அதிருப்தி இப்படி எல்லோருக்கும் அதிருப்தி! அது மட்டுமா? சட்டசபை அங்கத்தினர்களுக்கு அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிருப்தி ஏன் மந்திரிகளுக்கே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது! விவசாயிகளுக்கு, வர்த்தகர்களுக்கு, மருத்துவர்களுக்கு நாட்டிலுள்ள எல்லோருக்கும் அதிருப்தி உண்டாகி இருக்கிறது!

இந்த நிலையை சர்க்கார் வளர விடக்கூடாது! அப்படி வளர்ந்தால் இது எங்கு கொண்டு போய் விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது!

ஆகவே சர்க்கார் உடனே சிப்பந்திகளின் குறைபாடுகளை நீக்க—வழிவகை செய்ய முன்வர வேண்டும்!

சட்டங்களில் உள்ள நீதியை—நேர்மையை நிறைவேற்ற முயல வேண்டும்!

இன்ஷூரன்ஸ் ஊழியர்களின் குறையை கவனித்து, அவர்களது வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்!

நாட்டிலுள்ள மக்களின் ஆயுளுக்கு பாதுகாப்புத் தேடும் அரசாங்கம் மக்களின் வாழ்க்கைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும்!

பல நாடுகளில் புரட்சி ஏற்பட்டதின் சரித்திரத்தை ஆராய்ந்தால் அந்த நாட்டில் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகவே ஏற்பட்டிருக்கிறது! இந்த நிலையை அரசியலார் வளரவிடக் கூடாது!

பிரஞ்சுப் புரட்சி மக்கள் மனதில் ஏற்பட்ட கொந்தளிப்பின் காரணமாகவே ஏற்பட்டிருக்கிறது! இதை உணர வேண்டும்! இதை வற்புறுத்தவே இங்கு கூடியிருக்கிறோம்!

உங்களைப் போன்ற படித்தவர்கள் முன் வந்து பணியாற்றினால்தான் இந்தக் குறைகளைப் போக்க முடியும். நீங்கள் புரியும் பணிகளைக் கண்டுதான் சர்க்கார் செவி சாய்க்கும்! "நமக்கென்ன, நாம் இதில் ஏன் தலையிட வேண்டும்" என்று எண்ணிவிடக் கூடாது! மற்றவர்களுக்குப் படித்தவர்கள் வழிகாட்டிகளாக இருக்கவேண்டும்!

(12-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் பாடல்களை அடிகளார் தொகுத்துக் கொடுப்பாரா?

(அண்ணா பேச்சு)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் முன்னர் அஞ்சல் தலையில் தமிழர்களின் உருவம் அமைக்க வேண்டுமென்று அரசினரைக் கேட்டபோது—எதைப் போடுவது. யாரைப் போடுவது என்று கேட்டார்கள். வள்ளுவர் உருவம் அமைய வேண்டுமென்று கூறியபோது, வள்ளுவரின் உருவம் எப்படிப்பட்டது என்று தெரியாதிருக்கும்போது எப்படி வள்ளுவர் உருவம் அமைப்பது என்றார்கள். இப்போது நாம் "இதோ வள்ளுவர் உருவம்" என்று காட்டி விட்டோம். அதை அரசினரும் ஏற்று அஞ்சல் தலையில் போட்டு விட்டார்கள். இது நமக்குப் பெருமையையும் தந்து விட்டது.

அதற்காக இன்று ஒரு விழாவும் கொண்டாடி விட்டோம். இதோடு நமது பணி தீர்ந்துவிடவில்லை.

படம் வெளியிடுவதாலோ, வள்ளுவரின் நூல்களை வெளியிடுவதாலோ, மலிவு நூல்கள் கொண்டு வருவதாலோ, உயர்ந்த பதிப்புகள் தருவதாலோ நமது கடமைகள் தீர்ந்து விடவில்லை. அதனால் நமக்கு நன்மையும் ஏற்பட்டு விட முடியாது, நிலை உயர்ந்து விடாது.

வள்ளுவரின் எடுத்துக் காட்டைப் பின்பற்ற வேண்டும். வள்ளுவர் வாழ்க்கைக்காக வகுத்துக் காட்டிய வழிகளின்படி நடந்து காட்ட வேண்டும், மக்களுக்கு விளக்க வேண்டும், மக்கள் பின்பற்றும்படி செய்ய வேண்டும்.

இன்று நமது வாழ்க்கை நிலை சீர்குலைந்திருக்கிறது, குடுகுடுப்பைககாரன் சட்டைபோல் இருக்கிறது. பல கோணங்களைப் பின்பற்றுகிறோம், நமக்கென்று இருக்கும் நூல் வழிகாட்டி நூல் எது என்று சொல்லமுடியாத நிலையிலிருக்கிறோம். பல நூல்களைக் காட்டுகிறோம். அது கூடாது. இதுதான் நமது நூல், இதுதான் நமது வழிகாட்டியான இலக்கியம் என்று ஒன்றைக் கூற வேண்டும். அப்படிக் கூறுவதற்கு நமக்கு வள்ளுவரின் குறள் ஒன்றுதான் இருக்கிறது. மற்றதெல்லாம் நமக்குப் பொருந்தாதவை. ஆகவே **குறள் ஒன்றுதான்** நமது வாழ்க்கையின் உயர்வை காட்டும் நூல். அதை ஏற்று அதையே பின்பற்ற வேண்டும். நான் முன்கூறியபோது குடுகுடுப்பைக்காரன் சட்டையைப் போன்று நம் நிலை என்றேன். ஏன் அப்படிக் கூறினேன் என்றால் குடுகுடுப்பைக்காரன் சட்டையில் பல ரகமான துணிகள் இருக்கும். ஓர் இடத்தில் பட்டுத் துணி இருக்கும், மற்றொரு இடத்தில் வெள்ளை நிறத் துணி இருக்கும், இன்னொரு இடத்தில் இன்னொரு நிறம் இருக்கும். இப்படி பல வகையாக இருக்கும்.

அதுபோல் நமக்கு பலரகமான நூல்கள் இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக இருக்கிறது. அதுவெல்லாம் நமக்குப் புறம்பானது. அவைகளை நமக்கு வழிகாட்டிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது!

இன்று நமது மக்கள் துயரத்தையும், வாழ்க்கையில் படும் இன்னல்களையும் பார்த்தால் வாழ்வுக்கு வகை சொல்லும் நூல்கள் இல்லை, இலக்கியங்கள் இல்லை.

பட்டு நெய்கிறவன் வீட்டில் பட்டுத் துணிக்குப் பதில், நூல் துணிகூடக் கிடைக்க வகையில்லை

மூன்றடுக்கு, நான்கடுக்கு மாளிகைகள் கட்டும் கொத்தனாருக்கு நல்வாழ்க்கை நடத்த குடிசைகூட கிடைப்பதில்லை. உலகத்தில்வாழ வகையின்றி மக்கள் திண்டாடுகிறார்கள் இதற்கு வகைசெய்வதற்கு எதுவும் நமக்குப் பயன்படுவதில்லை.

இவைகளுக்கு வழிகாட்டியாக குறள் ஒன்றுதான் நமக்கு இருக்கிறது. அதை யாவரும் படித்து, அதன் வழி நடக்க வேண்டும் திருவள்ளுவரின் வாக்குப்படி கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

நான் இவ்வாறு கூறுவதால் நமது ஓவியர் வேணுகோபால் அவர்கள் தீட்டியிருக்கும் ஓவியத்தை ஆளுக்கொன்று பணம் கொடுத்து வாங்கி சட்டமிட்டு வீட்டில் தொங்க வைத்து, மலர் மாலை சூட்டி காலை மாலை வணங்க வேண்டுமென்று கூறவில்லை.

திருக்குறளை முறைப்படி படித்து, அதிலுள்ள கருத்து நல்ல முறையில் உணர்ந்து நடக்க வேண்டுமென்பதுதான்.

நான் இன்னும் கூறுவேன், திருக்குறளை நமது அடிகளார் அவர்களும், நமது தலைவர் அவர்களும், தமிழறிஞர்களும் ஒன்றுகூடி குறளை வாழ்க்கைக்கு பயன்படும்படியான பாடல்களைத் தொகுத்து, எது, எது மக்கள் வாழ்க்கைக்குப் பயன் படும்படியானது என்பதை ஆராய்ந்து தந்து மக்களிடம் அதைக் கொடுக்க வேண்டும், அதை உறுதி இட்டுக் கூறிவிட வேண்டும்.

அதை முதலில் செய்து கொடுத்தால் பயனுடையதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொகுப்பு வரவேண்டும்.

இன்னது மக்கள் வாழ்க்கைக்குப் பொருந்தமானது, இன்னின்னது மக்கள் ஒழுக்க நிலைக்கு உகந்தது. இன்னின்னது மக்கள் ஒன்றுபட உகந்தது, இன்னின்னது மக்கள் வேற்றுமையைக் களைவது.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொகுப்பு வரவேண்டும். இதைப் புலவர் பெருமக்கள் கூடிக் கலந்து ஆராய்ந்து தொகுத்துக் கொடுக்க வேண்டும் வள்ளுவர் குறளில் ஆணையிடுவது போன்று பல பாடல்கள் இருக்கிறது! அவைகளையெல்லாம் மக்கள் படிக்கும் வண்ணம் தொகுத்துக் கொடுக்க வேண்டும்.

நான் இப்படிக் கூறுவதால் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம்.

நான் கூறுவதெல்லாம் சிறந்த பாடல்களையெல்லாம் தொகுத்துக்கொடுத்து அதை மக்கள் பயனடையும்படியான வகையில் இருக்க வேண்டுமென்பதற்காகவே கூறுகிறேன்.

நமது அருமை நண்பர் கண்ணதாசன் "கற்கக் கசடற" என்ற பாடலை பாடிக் காட்டினார்

அந்தப் பாடல் உத்திரவுப் பிறப்பிப்பது போன்றிருந்தது. ராணுவத் தளபதி போர் வீரனுக்கு உத்திரவிடுவது போன்றிருந்தது, அவ்வளவு உறுதியாக ஆணையிடுவது போன்று அந்தப் பாடலைப் பாடியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

அந்தப் பாட்டில் ஒன்றாவது வரி இரண்டாவது வரி, மூன்றாவது வரி ஒன்றுக்குப்பின் ஒன்று வீரயாகச் சொல் அமைந்திருக்கிறது.

அவைகளையெல்லாம் மக்கள் நன்றாக, கருதது விளங்கும்படியாகப் படிக்க வேண்டும், அதன்படி செயலில் நடக்கவேண்டும்.

'கற்றதனலாய பயன்' என்ற பாடல் கொஞ்சுவது போன்று, வாதாடுவது போன்று இருக்கிறது.

அது எப்படி இருக்கிறதென்றால் தன் மகனைப்பார்த்து பெற்றோர்கள் "மகனே நீ, நன்றாகப் படி, தேர்வில் வெற்றி பெற்றால் கலெக்டராகலாம், மின்பொறியாளராகலாம்", என்று ஆசை வார்த்தைக் கூறுவது போன்று இருக்கிறது.

அதன் பொருள் நல்ல முறையிலிருந்தாலும் முன் சொன்ன பாடலில் இருந்த வீரம் இல்லை

அதே போன்று,

"தெய்வம் தொழாள், கொழுனனைத் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற பாடல்.

பெண்களிடம், "நீ உன் கணவனிடம் நன்றாக நடந்து கொண்டால், கணவன் அன்பு கொள்ளும்படி நடந்தால், நீ மழை பெய்யும்படிக் கூறினாலும் மழை பெய்யும்" என்ற உவமையோடு கூறுகிறார். ஆசை வார்த்தை சொல்லி கூறுகிறார்.

ஏன் மழையைப் பற்றிக் கூறினார் என்றால் மக்களுக்கு மழை அவசியம், மழை பெய்தால் ஊரணி நிரம்பும், ஊரணி நிரம்பினால் விவசாயம் பெருகும், விவசாயம் பெருகினால் மக்கள் சுகமாக வாழ்வார்கள். இதை வைத்தே நயமாக வள்ளுவர் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட பாடல்களை நல்லமுறையில் மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வண்ணம் தொகுத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு புதுக் கருத்துக்கள் காணும்படியாகத் தொகுத்துக் கொடுத்தால் வள்ளுவர் படம் ஒவ்வொரு வீட்டில தொங்குவதைவிட குறள் ஒவ்வொருவர் வீட்டிலும் மிளிரும், இது பயன் தரவும் செய்யும்.

நான் மாணவனாக இருக்கும்போது என்னை ஈர்த்த பாடல்!

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்" என்ற பாடல்தான்! அதை நான் உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதும்படித்தேன். அப்போது எனக்கு பொருள் சொல்லிக்கொடுத்த ஆசிரியர்,

எந்த பொருளையும் யார் வாயால் எதைக் கேட்டாலும் என்ற கருத்துப்படும்படி கூறினார், ஆனால் நான் கல்லூரியில் படிக்கும்போது தான் வள்ளுவர் கூறிய உட்கருத்தைப் புரிந்து கொண்டேன்.

காலஞ் சென்ற நாவலர் சோமசுந்தர பாரதியார் புதுக் கருத்துக்களடங்கிய பொருளைக் கூறினார்.

அவர் கூறும்போது "எப்பொருள் யார்—யார் வாய்க் கேட்பினும்" என்ற வரிக்கு பொருள் கூறும்போது "கையை" வீசிய திசையைப் பார்க்கும்போதே தெரிந்து கொண்டேன்.

அதனால் தான் கூறினேன் குறளைப் படிக்கும்போதே, உச்சரிக்கும்போதே பொருள் விளங்கும்படி படிக்கவேண்டும். அப்படிப் படித்தால்தான் உண்மையான பொருள் விளங்கும்.

ஆகவே மக்கள் உணரும்படியான—வள்ளுவரின் எண்ணம் நிறைவேறும்படியான வகையில் குறளை 'மக்களிடம் புகுத்த வேண்டுகிறேன்.

எனது தம்பி கருணாநிதி பேசும்போது, வள்ளுவர் சொன்ன "இன்பத்துப் பாடல்களை" நல்ல முறையில், அழகுற, பருவத்துக்கேற்றபடி கருத்துக்களை விளக்கினார்.

குறளிலுள்ள பாடல்களை தேவைக் கேற்றபடி நேரத்திற்குகந்தபடி, காலத்திற் கேற்றபடி, உபயோகிக்கலாம்.

நெய்வேலியில் நிலக்கரி எடுப்பதற்கு நமது அரசினர் கையாள்வது போன்று, அது இன்று மக்களுக்குப் பயன் படாமல் இருப்பது போன்று இருக்கக்கூடாது. மக்கள் பயன் அடையும்படியான முறையில், மக்கள் அறிஞர்களாக—மேதைகளாக மிளிரும் வண்ணம் குறளைச் செய்ய வேண்டும். "பிறப்பொக்கும்" என்ற பாடலை மக்கள் உணரும்படியான வகையில் கொண்டு வர வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

எந்த விடுதலை இயக்கமாக இருந்தாலும் இயக்கத்தின் நினைப்புகள் உயராவிட்டால் விடுதலை அடைய முடியாது!

தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டில் எஸ்.டி. சோமசுந்தரம் பேச்சு!

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! மாணவ நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மூதல் மாநாடு இன்று காலை மாபெரும் ஊர்வலத்தோடு ஆரம்பித்து பல மாணவத் தோழர்கள் ஆழ்ந்த கருத்துக்களுடன் பேச, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றிருப்பதான மிகவும் மகிழ்ச்சியாகக் கூடி ஒன்றாகவும், உள்ளபடியே சொல்லப்போனால் மற்ற மாவட்ட மாநாடுகளைவிட இந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது! இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பல மாணவ நண்பர்கள், மாணவர் கழகம் இன்னின்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நல்ல பல அறிய ஆலோசனைகளை எடுத்துக் கூறி அதற்கான முயற்சிகளைப் பொதுச் செயலாளர் மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். நானும் பொதுச் செயலாளர் என்ற முறையில் அந்த வேண்டுகோள்களுக்குப் பதில் அளிக்கின்ற கட்டாயத்திற்கு உட்பட்டிருக்கிறேன்.

இந்த திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் என்ற ஒரு அமைப்பினை இவ்வளவு முறையோடு ஒருங்குபடுத்தி அமைத்து பணியாற்றுவது அறிஞர் அண்ணா அவர்களின் அரிய ஆலோசனையின் பேரிலேயே தான் என்பதை நான் உங்களிடத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அமைப்பு நிறுவப்பட்டு சென்னையில் மாநில மாணவர் மாநாடும், அதை தொடர்ந்து மதுரை, திருச்சி, கடலூர் போன்ற இடங்களில் மாவட்ட மாநாடுகள் வெற்றியுடன் நடத்திவிட்டு இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தின சார்பில் மிக சிறப்பானதோர் மாநாட்டை நடத்தி முடித்திருக்கிறீர்கள். இந்த அளவிற்கு நம் மாணவர்களிடையே கொழுந்து விட்டு எரியும் ஆர்வமும், செயல் திறனும், ஒத்துழைப்பும் இருக்கும் என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நான்கு ஆண்டுகளுக்கு முன்பாகவே நான் இத்தகைய பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பேன், என்றும் இப்பொழுது ஒன்றும் வீண் போய்விடவில்லை. நாம் எடுத்துக்கொண்ட முயற்சியும், கூட்டு மனப்பான்மையும் நாம் எதிர்பார்த்ததைவிட நல்ல வெற்றியை அளித்திருக்கிறது! இன்று தஞ்சையில் நடைபெறும் இந்த மாநாடு மாணவர் வரலாற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். காலையிலே மகத்தானதோர் ஊர்வலம்! அதிலே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள். கழகத் தோழர்கள் கழகக் கொடிகளுடன் காட்சியளித்த வண்ணம் இரண்டு மைல்களைக் கடந்து மாநாட்டுப் பந்தலை வந்தடைந்ததானது உள்ளபடியே நமக்கு ஒரு மகிழச்சியூட்டும் நிகழ்ச்சி மட்டுமின்றி மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஒரு அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கும் என்பதில் ஐயமில்லை! எனவேதான் இன்று எதிர்காலத்தில் மாணவர் கழகத்தை நடத்திச் செல்லக்கூடிய நாம் அனைவரும் பொறுப்புள்ளவர்களாக இருந்து பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். திராவிடத்தை நாடறியச் செய்தது சில பல காலத்துக்கு முன்பு குடந்தையிலே நடைபெற்ற மாநாடுதான் காரணம். அறிஞர் அண்ணா அவர்களின் அரிய ஆலோசனையின் பேரிலேயே அந்த மாநாடு நடைபெற்றது! அதற்குப் பின்னர் நீதிக் கட்சியானது கலைக்கப்பட்டு 1944ம் ஆண்டு சேலம் மாநாட்டில்தான் திராவிடர் கழகம் உருவாக்கப்பட்டது! அந்த மாநாட்டில்தான் அறிஞர் அண்ணா அவர்களின் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது! அதற்குப் பின்னர் 1949ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டு நல்ல ஜனநாயக முறையில் நடைபெற்று வருகிறது! இந்த கட்சி அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்குவதாலும், அவருக்கு உறுதுணையாக இலட்சோப லட்சம் தம்பிமார்கள் அணிவகுத்து நிற்பதனால், 'திராவிட நாடு' விடுதலை பெறுவது உறுதியென்று பலர் நம்பிக்கையோடு எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், அந்த நம்பிக்கை வீண் போகா வண்ணம் நாம் அனைவரும் உள்ள உறுதியோடு மேலும் தொடர்ந்து பணியாற்றுவோமேயானால் நிச்சயம் 'திராவிடநாடு' அடைந்தே தீருவோம்! இந்த மாநாட்டின் வசூல் செலவு போக கொடுக்க இருக்கிற தொகை தஞ்சையைப் பொறுத்தவரையில் மிகவும் குறைவு என்றுதான் எண்ணுகிறேன்! இந்த மாநாடு நடைபெறும் இந்த இடத்திலே நான் இன்று காலை இரயில் நிலையத்தில் இருந்து நேராக மற்ற சில நண்பர்களோடு வந்து பார்த்த நேரத்திலே நண்பர் பத்மநாபன் (குடந்தை நகர தி. மு. க. செயலாளர்) மற்ற சில மாணவ நண்பர்களுடன் இங்கும் அங்கும் ஓடி வேலை செய்து கொண்டிருப்பதை பார்க்கும்போது இவர் எப்பொழுது மாணவராக ஆனார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது! மிகவும் தொல்லைகளுக்கிடையே தான் இந்த வட்டாரத்தின் அருமைத் தோழர்கள் இந்த மாநாட்டினை நடத்தியிருக்கிறார்கள்! இந்த மாநாட்டிலே பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் கல்லூரிகளிலேயிருந்தும் வந்து கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய பல நண்பர்கள் எனக்கு பல வேண்டுகோள்கள் விடுத்தார்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் போராட்டத் தளபதிகள் போல் தினவெடுத்த தோள்களோடு போராட்டம் வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கொண்டார்கள்! நம்முடைய தாய்மொழியாம் தமிழ் நசுக்கப்பட்டு அந்த இடத்தில் இந்தி ஆதிக்கம் பெறுகிறது! அந்த இந்தியை எதிர்த்து போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்றெல்லாம் மிகவும் ஆர்வத்தோடு பேசினார்கள். அவர்கள் மொழியினிடத்தும், தாய் நாட்டு விடுதலை மீதும் அக்கரை காட்டுவதும், அதற்காகத் துடியாய் துடிப்பதையும் நான் மனமார பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நாம் மேற்கொண்டுள்ள இலட்சியத்தையும் நம்முடைய அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அடிக்கடி நமக்கு உணர்த்தி வரும் கடமை உணர்ச்சிகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. 'அரசியலிலே' மாணவர்கள் நேரடியாகக் கலந்து கொள்ளக் கூடாது' என்று மற்ற கட்சித் தலைவர்கள்போல வெளி வேஷம் போடுபவரல்ல நமது தலைவர் அண்ணா. உள்ளபடியே மனப்பூர்வமாக விரும்புகிறார் மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்று. எனவே நம்முடைய முயற்சியை நம்முடைய குறிக்கோள் நிறைவேறும் வரையில் நமது பலத்தை சிதறடித்து விடக்கூடாது என்று மிகவும் வேண்டிக் கொள்கிறேன். அப்படி ஒரு போராட்டம் ஏற்படுமானால் அதற்குத் தயாராய் இருக்க வேண்டும்என்பதுஉண்மைதான் என்றாலும், அந்தப் போராட்டப் படையை நடத்திச் செல்லும் தளபதி அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள் என்பதை பணிவன்போடு உங்களிடத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் அடிக்கடிக் கூறுவார்கள், "வாள் கூர்மையாக மட்டும் இருந்தால் போதாது, அது உபயோகப் படுத்தும் முறையும் ஒருவன் அறிந்திருக்க வேண்டும்" எனவே அந்த உயர்ந்த நீதியை நாம் அனைவரும் மனதில், எண்ணத்தில் கொள்ள வேண்டும். விடுதலை இயக்கம் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும்தான் பணியாற்றுகிறது. 14-வது லூயிக் காலத்தில் பிரான்சு நாட்டில் அட்டூழியங்கள் பல, அநீதிகள் பல கொடுமைகள் எண்ணற்றவை நடந்ததின் விளைவாகத்தான் அந்த நாட்டிலே புரட்சி உருவாயிற்று. அதற்குப் பின்னர் மாவீரன் நெப்போலியன் நியமிக்கப்பட்டான். அவன் காலத்திலேயும் புரட்சிகள் பல உருவெடுத்தது. ரூசோ இல்லாவிட்டால் புரட்சி ஏற்பட்டிருக்காது என்று சொன்னான். நெப்போலியனுடைய நிலை உயர்ந்த அளவிற்கு அவனுடைய நினைவு உயரவில்லை. அதன் காரணமாக மேலும் பல கெடுதல்கள் ஏற்பட்டது! எனவே எந்த விடுதலை இயக்கமாக இருந்தாலும் நினைப்பு உயராவிட்டால் விடுதலை அடையமுடியாது! ஆத்திரம் பிடித்தவர்கள் உணர முடிகிறது! இந்தியா வளம் பெற வேண்டும், விடுதலை பெற வேண்டும், அந்நிய ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும் என்று படித்த பட்டதாரிகளும், அதற்கு உறுதுணையாக விடுதலை ஆர்வம் கொழுந்துவிட்டு எறியும் பாமரர்கள் வரை சொன்னார்கள்! அதனால்தான் இந்த இந்திய உபகண்டம் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற முடிந்தது. விடுதலை பெற்ற இந்தியாவில் காங்கிரஸ்காரர்களின் நிலை உயர்ந்தது தவிர அவர்களுடைய நினைப்பு, எண்ணம் உயரவில்லை. இங்கு பேசிய ஒரு மாணவர் குறிப்பிட்டார்! தி. மு கழகத்தின் பொதுச் செயலாளரும், தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் தஞ்சை மாவட்டம் என்று குறிப்பிடடார்கள்! ஆனால் இந்த மாவட்டத்தில் கழகத்தின் சார்பில் ஒருவர்கூட சட்ட மன்ற உறுப்பினராக இல்லையே என்று மிகவும் வருந்தினார். என்னைப் பொறுத்த வரையில் தஞ்சை மாவட்டம் என்றைக்குமே விருப்பு, வெறுப்பு அற்ற ஒரு மாவட்டமாகும்! எனவே சட்ட மன்ற உறுப்பினர்கள் இல்லையே என்ற குறை போக்கப்பட வேண்டுமானால் மாணவர்களாகிய நாம் அனைவரும் அடுத்த பொதுத் தேர்தலுக்குள்ளாகத திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்! கழகக் கொள்கைகள், நல்ல முறையில் பிரச்சாரம் ஏற்படக்கூடிய அளவிற்குத துண்டறிக்கைகள் வெளியிட வேண்டும் என்று இந்த மாநாட்டில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அது குறித்து நான் நண்பர்களின் ஆலோசனையின் பேரிலேயே அதற்காக ஒரு குழு ஒன்று அமைத்து அந்த முயற்சியை வெற்றிகரமாகச் செய்வோம் என்று உறுதி கூறுகிறேன்.

Registered as a Newspaper in CEYLON
Regd NoM. 7074 விலை 16 காசு **MALAIMANI** PhoneNo. 83285
இலங்கையில் 20 சதம்

திராவிட நாட்டில் வளமில்லை என்று கூறுகிறவர்கள் துரோகிகள்!

(மனோகரன் பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் கூட்டு மந்திரி சபையை அமைத்திருக்கிறது கேரளத்தில்! அறுபத்தி மூன்று இடத்திலே காங்கிரஸ் வெற்றி பெற்றது. இன்று ஆட்சிக்குழு தலைவனாக பட்டம் தாணுபிள்ளை இருக்கிறார்.

அன்று வேண்டாத கட்சிகள் என்று கருதப்பட்ட கட்சிகளோடு கூட்டு சேர்ந்து இன்று கூட்டு மந்திரி சபையை அமைத்திருக்கிறார்கள்.

முஸ்லிம் லீக் ஒரு வகுப்புவாதக் கட்சி என்று, அன்று கூறினார்கள். இன்று அதே வகுப்புவாதக் கட்சியோடும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியோடும், மத அடிப்படையில் அமைக்கப்பட்ட கத்தோலிக்க சபையினரோடும் ஒன்று சேர்ந்தனர், பிற்போக்கு ஸ்தாபனங்கள் அனைத்தும் காங்கிரசில் கூட்டு சேர்ந்தன!

இப்போது அமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கும் சங்கர் நான்கு ஆண்டுகட்கு முன்னால் "காங்கிரஸ் கட்சியை குழி தோண்டி புதைப்பதே என் வேலை" என்று கூறினார். அவர் இன்று அங்கே அமைச்சர்!

கேரளத்தில், பேசியே கம்யூனிஸ்ட்டை ஒழித்தவர் என்கிறார்களே அந்த மன்னத் பத்மபன் கூட காங்கிரசை ஒழித்துக் கட்டுவேன் என்று சொன்னவர் தான்! இந்த இரண்டு பேருமே காங்கிரசை ஒழிப்பேன் என்றார்கள்.

கேரளத்தில் கம்யூனிஸ்ட் இருபத்தி ஐந்து இடங்களை மட்டுமே கைபற்றியது. மீதி இடங்களை காங்கிரஸ் வெற்றி பெற்று பெற்றது என்பதை மானங்கெட்டவர்கள்தான் ஒப்புக் கொள்வார்கள் கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் காங்கிரசை விட அதிக வாக்குகள் பெற்றிருக்கிறார்கள் என்பதை கணக்கு காட்டிய போது கேரளத்தில் காங்கிரசுக்கு வலிவு இல்லை என்று தெரிகிறது!

நேரு. கேரளத்தில் பேசும் போது காங்கிரசோடு முஸ்லீம் லீக்கை எப்படி சேர்த்தீர்கள் என்று கேரளத்தில் கேள்வி எழுந்தது! நேரு பதில் சொல்லவில்லை. பாகிஸ்தான் பிரிவினைக்காக அமைக்கப்பட்ட இக்கட்சியை எப்படி சேர்த்துக் கொண்டீர்கள் என்று கேட்டதற்கு யாருமே பதில் சொல்லவில்லை.

தேபரைக் கேட்டார்கள். கம்யூனிஸ்ட்டை ஒழிப்பதற்கு முஸ்லீம் லீக்கோடு கூட்டு சேர்ந்தோம் என்றார்கள். அமைச்சரவையில் முஸ்லீம் லீகிற்கு இடம் உண்டா என்று மீண்டும் கேட்கப்பட்டதற்கு தேர்தலுக்குப் பிறகு பேச வேண்டிய பேச்சு என்றார் பிரதமர் நேரு.

கேரளத்தில் காங்கிரசின் தலைவர் சஞ்சீவ ரெட்டி புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்த போது மந்திரி சபையில் முஸ்லீம் லீகிற்கு இடம் உண்டா என்று கேட்கப்பட்டது. சிந்திக்க வேண்டிய வேலை என்று கூறினார். முஸ்லீம் லீக் பன்னிரெண்டு இடங்களில் போட்டி போட்டு பதினொரு இடங்களை கைப்பற்றினர். அவர்களுக்கு இப்போது இடமில்லை!

அண்மையில் நேரு, 'மெயில்' பத்திரிகையில் அது பற்றி ஒரு விளக்கம் தந்திருக்கிறார்—

"முஸ்லீம் லீகின் தேர்தல் பிரகடனத்தை முன்னாலே பார்க்கவில்லை" என்று

கேரளத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் கொடியோடு, முஸ்லீம் லீகின் கொடியோடு காங்கிரஸ் கொடியும் பறந்ததே! அந்தக் கொடியின் கீழ் பேசிய அவர்களே தேர்தல் பிரகடனத்தை பார்க்கவில்லை என்று இன்று கூறுகிறார்கள். நேரு இன்னொன்றும் கூறுகிறார், தேர்தல் பிரகடனம் மலையாளத்திலே இருந்தது! பழைய முஸ்லீம் லீகைப போலவே தான் இப்போது இருப்பதும் இருக்கிறது. இதை எப்படி சேர்ப்பது என்று கேட்டிருக்கிறார்!

அனுபவிக்கிற போது அனுபவித்து விட்டு, இன்பம் சுவைத்து விட்டு, எதிரே இருக்கும் நபரை பார்த்து 'நீயா, நீ யென்று தெரிந்திருந்தால் எழுந்திருந்திருப்பேனே' என்று அகலிகை கூறியதாக புராணத்திலே கூறப்படுகிறது!

அதைப் போல் நேரு, முஸ்லீம் லீக் கட்சி தேர்தல் பிரகடனத்தை பார்க்கவில்லை. பார்த்திருந்தால் சேர்த்திருக்க மாட்டேன் என்று கூறுகிறார். இப்படிப்பட்டவருக்கு புனிதவதி பட்டம் கிடைக்காது—மாறாக அரசியல் விபச்சாரி என்ற பட்டம் தான் கிடைக்கும்.

கேரளத்தில் மற்றக் கட்சிகளோடு கூட்டு சேராவிட்டால் ஒத்துழைப்பு கிடைக்காது, வெற்றி பெற முடியாது என்று நினைத்து அங்கே உள்ள காங்கிரஸ்காரர்கள் அரசியல் தசை வியாபாரிகள் போல் நடந்து கொண்டிருக்கின்றனர்.

நேருவின் ஆட்சி சுபிட்சத்திற்கு வழிகாட்ட வில்லை! அராஜகத்திற்குத்தான் வழகாட்டியாக இருக்கிறது.

மேலும் எதிர்க் கட்சித் தலைவர்களை, அவர்களது கருத்துக்களை மதிக்கின்ற மனோபாவம் இந்த ஆட்சியாளருக்கு வளர வேண்டும். ஆனால் காங்கிரஸ் ஆட்சியினர் எதிர்க் கட்சிகளை அவமதிக்கின்றனர்.

இவர்களின் கொட்டம் அடங்க வேண்டுமானால் தேர்தலில் பாடம் போதிக்க வேண்டும், ஆகவே தான் இன்றிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும், அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி வருவது போல், தேர்தலுக்காக சிறுகச் சிறுக பணம் சேகரித்து வர வேண்டும். அமைச்சர்களுக்கு தேர்தல் காலத்தில் புத்திபுகட்ட வேண்டும். காங்கிரஸ் ஆளுங் கட்சியிலிருந்து இறங்கி எதிர்க் கட்சியாக அமர வேண்டும்.

அதற்கான பணியிலே தோழர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!

Statement about ownership and other particulars about newspaper.

MALAIMANI

FORM IV

(See Rule 8)

1.	Place of Publication	— Madras
2.	Periodicity of its Publication	— Weekly
3.	Printer's Name	— P. S. Elango
	Nationality	— Dravidian
	Address	— 404, T. H. Road, Madras-5.
4.	Publisher's Name	— P. S. Elango
	Nationality	— Dravidian
	Address	— 1/35, Oil Monger Street, Madras-14.
5.	Editor's Name	— P. S. Elango
	Nationality	— Dravidian
	Address	— 1/35, Oil Monger Street, Madras-14
6.	Names and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	K. T. Sundari, (Sole Proprietor) 1/35, Oil Monger Street, Madras-14.

I, P. S. Elango hereby declare that the particulars given above are true to the best of my knowldge and belief.

Dated, 6th March, 1960.

P. S. ELANGO
Signature of Publisher,

(நெடுஞ்செழியன் பேச்சு)

9-ம் பக்கத் தொடர்ச்சி

நண்பர் மாரிசாமி சொன்னார் 'ஆளுங்கட்சிக்காரர்களை அழைத்திருக்கலாம், எதிர்க் கட்சிக்காரர்களாகிய எங்களை அழைத்திருக்கிறீர்களே, நாங்கள் சொல்வதை ஆளுங் கட்சியினர் மதிக்கமாட்டார்கள்" என்று. நான் நினைக்கிறேன் — என்னையும் மாரிசாமி போன்ற எதிர்க் கட்சியினரைக் காட்டி பயமுறுத்தவே அழைத்திருக்கிறார்கள் என்று! குறை சொல்லுபவர்கள் யார் என்று பார்க்காது நியாயமா என்பதைப் பார்த்து செயலாற்ற வேண்டும்!

அரசாங்கத்தில் பணியாற்றும் சிப்பந்திகள் சரிவர பணியாற்ற வேண்டுமானால், அரசாங்கப் பணிகள் ஒழுங்கான முறையில் நடைபெற வேண்டுமானால், சிப்பந்திகள் மனதில் கவலையோ, வறுமை—குறைகள் தாண்டவமாடக்கூடாது!

இதையெல்லாம் உணர்ந்து இந்த இன்ஷூரன்ஸ் ஊழியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களது வாழ்க்கை உயர்வதற்கான வசதிகளைச் செய்து தரும்படி கேட்டுக்கொள்வதுடன், சிப்பந்திகளாகிய உங்களுக்கும் உறுதி கூறுகிறேன்! உங்களுக்காக — உங்கள் குறைகள் நீங்குவதற்காக நானும், திராவிட முன்னேற்றக் கழகமும் பணிபுரியும் என்று கூறி விடைபெறுகிறேன்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை